


உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடக்குமாயின் அதில் போட்டியிட பிக்குமார் அணியொன்று தயாராகி வருகிறதாம்.

பெரும் நாடொன்றின் பின்னணியில் இந்த வேலைகள் நடப்பதாக தகவல். பிக்குமார் கூட்டணி, ஊர்களில் அதிகாரத்தை கைப்பற்றினால் அவர்களை வைத்து அரசியல் செய்வதுதான் இதன் நோக்கமாம்.


Follow us:

# தமிழன்

THAMILAN தமිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 140 சுபகிருது வருடம், மார்கழி மாதம் 20ஆம் திகதி புதன்கிழமை (04.01.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஆகிர் - 11, 0115 886187 - பக்கங்கள் 10 விலை ரூ.60


## கமெண்ட் கந்தர்...

உலக நாடுகளில் தேர்தல் எப்ப நடத்துவாங்கள் எண்ட நிலைமை இருக்கும்.. இங்கதான் பாருங்கோ எப்ப தேர்தல ஒத்திவைக்கலாம் எண்ட கூத்து..!



# மார்ச் 4இல் தேர்தல்!

## தேர்தல் ஆணைக்குழு ஆராய்வு

உள்ளூராட்சி சபைத் தேர்தலை மார்ச் 4ஆம் திகதி நடத்துவது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு ஆராய்ந்துள்ளது. தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் விசேட கூட்டம் கொழும்பில் நேற்று நடைபெற்றது.

இதன்போது மார்ச் 10ஆம் திகதிக்குள் தேர்தலை நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டதுடன், தேர்தலை மார்ச் 4ஆம் திகதி நடத்துவது பற்றியும் ஆராயப் பட்டுள்ளது. அத்துடன், உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக் கோரல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஓரிரு தினங்களுக்குள் வெளியிடப்படவுள்ளது. 02 பக்கம்

## தேர்தல் வேண்டாம்! உயர்நீதிமன்றத்தில் மனு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மார்ச் 10ஆம் திகதிக்கு முன்னர் நடத்துவதென்ற தேர்தல் ஆணைக்குழுவின் தீர்மானத்தை இரத்துசெய்யக் கோரி உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற இராணுவ கேர்ணல் டபிள்யூ.எம்.ஆர். விஜேசுந்தர, தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள், பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் பலரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு இந்த மனுவை தாக்கல்செய்தார்.

ஒட்டுமொத்த தேசமும் எதிர்நோக்கும் இந்த நெருக்கடியான நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதென்ற தேர்தல் ஆணைக்குழுவின் தீர்மானம் பேரழிவிற்கு வழிவகுக்கும் என்றும் பொது மக்களுக்கு கூடுதல் சுமையை ஏற்படுத்துவதாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தேர்தல் ஆணைக்குழுவிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களின்படி, 2023ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் தேர்தலை நடத்துவதற்கு குறைந்தபட்சம் 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட வேண்டும் என்று மனுதாரர் கூறினார். 02 பக்கம்

## சஹ்ரானின் சகா காத்தான்குடியில் கைது

09 பக்கம்

## தேர்தலுக்கு ஐ.தே.க. எதிர்ப்பு



தேர்தலை நடத்தி, அதிக பணத்தை அச்சிட்டு, நாட்டை அராஜக நிலைக்குத் தள்ள எதிர்க்கட்சிகள் நினைத்தால், அது மிகவும் துரதிர்ஷ்டவசமான நிலையாகுமென ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார். 02 பக்கம்

## சீனாவுடன் வர்த்தக ஒப்பந்தம்

### அரசு அறிவிப்பு

•நா.தினுஷா

நாட்டில் வெளிநாட்டு சொத்துகளை பாதுகாத்துக் கொண்டால் மாத்திரமே கடன் உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதனூடாகவே சர்வதேச சந்தைகளில் எம்மால் போட்டியிட முடியும். ஆகவே, சீனா உள்ளிட்ட சர்வதேச நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை முன்னெடுப்பதே எமது பிரச்சினைக்கான பிரதான தீர்வு என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. 02 பக்கம்

## தொழிற்சங்க எதிர்ப்புக்கு அஞ்சோம்!

### அமைச்சர் பந்துல தெரிவிப்பு

•நா.தினுஷா

அசியலமைப்பை மீறி என்னால் செயற்பட முடியாது. தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு பயந்து, புகையிரத திணைக்களத்துக்கு புதிய ஊழியர்களுக்கான நியமனங்களை வழங்கும் அதிகாரம் எனக்கு கிடையாது. முறையாகவே நியமனங்களை வழங்கமுடியும். அதற்கு சிறிது காலம் தேவைப்படும் என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் அமைச்சரவை ஊடகப் பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார். 02 பக்கம்

## மாணவர்களை இணைத்துக்கொள்ள பாடசாலைகளில் புதிய பொறிமுறை

### அமைச்சரவை தீர்மானம்

05 பக்கம்



## தேர்தலை நடத்தினால் அரிசி தட்டுப்பாடாகும்

### நிதி அமைச்சு எச்சரிக்கை

•கே.சுபானி

இவ்வாண்டில் அவசரத் தேர்தலை நடத்தினால் எதிர்வரும் காலங்களில் நெல் கொள்முதல் செய்வதற்கு கூட பணமில்லாது போகுமென நிதியமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். நெல் கொள்வனவு செய்யமுடியாமல் போனால் மீண்டும் அரிசி தட்டுப்பாடு ஏற்படுமென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். 02 பக்கம்

## குமார் நடேசனுக்கு இந்திய உயர் விருது



இலங்கையின் சமூகத் தலைவரும் எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டின் முகாமைத்துவப் பணிப்பாளருமான சிவகுமார் நடேசனுக்கு இந்தியாவின் மதிப்புமிக்க 'பிரவாசி பாரதிய சம்மான்' விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரவாசி பாரதிய சம்மான் விருது (பி.பி.எஸ்.ஏ.) என்பது வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு வழங்கப்படும் உயரிய கௌரவமாகும். வெளிநாடு வாழ் இந்தியர்கள், இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் அல்லது வெளிநாடு வாழ் இந்தியர்கள் அல்லது இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்களால் அங்கீகரிக்கப்பட்டு நடத்தப்படும் அமைப்பு/நிறுவனம் ஆகியவற்றுக்கான பிரவாசி பாரதிய திவாஸ் மாநாட்டின் ஒரு பகுதியாக, இந்திய குடியரசுத் தலைவரால் பிரவாசி பாரதிய சம்மான் விருது வழங்கப்படுகிறது. 02 பக்கம்

## தினேஷின் கொலை தொடர்பில் 140 பேரிடம் வாக்குமூலம் பதிவு

### கொலையாளி தொடர்பில் மர்மம் நீடிக்கிறது

பிரபல வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் இதுவரை 140 பேரிடம் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் மனித கொலைகள் பிரிவு மேற்கொண்டு வருகின்றது. இதேவேளை, தினேஷ் ஷாப்டரின் மரணம் பதிவாகிய இடத்தில் காணப்பட்ட இரத்த மாதிரிகள் உள்ளிட்ட ஆதாரங்கள் மரபணு பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. 02 பக்கம்

## யாழிலிருந்து கொழும்புக்கு மேலதிகமாக 33 பஸ்கள்



•யாழ்.செய்தியாளர்

கொழும்பிலிருந்து வடக்கு மாகாணத்திற்கான புகையிரத சேவைகள் நாளை வியாழக்கிழமை முதல் அநுராதபுரத்துடன் மட்டுப்படுத்தப்படவுள்ள நிலையில், யாழ்ப்பாணம் - கொழும்பு பஸ் சேவைக்காக மேலதிகமாக 33 பஸ்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாக வட மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் ரவீந்திரன் தெரிவித்துள்ளார். 02 பக்கம்

## மின் கட்டண அதிகரிப்பு தீர்மானம் ஒத்திவைப்பு



மின் கட்டணத்தை மேலும் அதிகரிப்பது தொடர்பான இறுதி முடிவு ஒரு வாரத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் இது குறித்து ஆலோசித்து, கட்டண உயர்வு குறித்து முடிவெடுக்கப்பட இருந்தது. மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவினால் இது தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டது. 02 பக்கம்


அதிதுரித

Dialog HOME BROADBAND இடமிருந்து

வீட்டிற்கு Wi-Fi ரீலோட்




இணைப்புடன் ரவுட்டர் ரூ.5990/-

புதியது மாதத்திற்கு 20GB ரூ.540/-

2 வாரங்களுக்கு 10GB ரூ.299/-

செயற்படுத்தல் ரீலோட் அல்லது MyDialog App மூலம்

Dialog எதிர்காலம் இன்றே.

# புலனாய்வுத்துறையில் உள்ள குறைபாடுகள்

## அமைச்சர் பந்துலவுக்கு சந்தேகம்

(நா. தினுஷா)

பொதுவாக எமது புலனாய்வுத் துறையில் பின்னடைவு இருக்கிறதா என்பது தொடர்பில் பிரச்சினை இருப்பதாக அமைச்சரும் அமைச்சரவை ஊடகப் பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (03) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

போதைப்பொருள் வியாபாரி கஞ்சிப்பானை இம்ரான் கடந்த 20ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவர் தலைமன்னாரினூடாக இராமநாதபுரத்துக்கு வருவதாக இந்திய புலனாய்வுத்துறை அறிவித்ததன் பின்னர், 21ஆம் திகதி இலங்கை புலனாய்வுப் பிரிவினர் இந்தியாவுக்குச் சென்றதாக எங்களுக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. அதுதொடர்பில் அமைச்சரவையிலும் பேசப்பட வில்லை.

இதனை எமது புலனாய்வுத் துறை அறிந்திருக்காமைக்கு காரணத்தை சம்பந்தப்பட்ட பிரிவினரிடமே விசாரிக்க வேண்டும். அரச பாதுகாப்பு அமைச்சால் அதற்கு பதில் வழங்கப்படும் என்று கருதுகிறேன். எனக்கு அதுதொடர்பில் தெளிவில்லை. பொதுவாக எமது புலனாய்வுத் துறையில் பின்னடைவு இருந்ததா என்பது தொடர்பில் பிரச்சினை இருக்கிறது. ஈஸ்டர் தினத் தாக்குதல்கள் இடம்பெறப்போவதாக இந்திய புலனாய்வுத் துறை அறிவிக்கும் வரை எமது புலனாய்வுத் துறையின் செயற்பாடுகளில் சிக்கல் இருந்தது. அதனை படிப்படியாக சரிசெய்து வருகிறார்கள் என்று கருதுகிறோம்.

# பஸ் கட்டணத்தில் மாற்றமில்லை!

## இரு தினங்களில் நிவாரணம் கிடைத்தால் தீர்மானிப்போம் என்று கெமுனு அறிவிப்பு

டீசல் விலை குறைந்துள்ளது என்பதற்காக பஸ் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது என்றும் இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்களில் தமக்கு நிவாரணம் பெற்றுக்கொடுத்தால் மக்களுக்கான நிவாரணத்தை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (02) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

டீசல் விலை 15 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு முன்னர் 10 ரூபா குறைக்கப்பட்டிருந்தது. எனவே, இதுவரையில், 25 ரூபா குறைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் பஸ் கட்டணத்துக்கென விலை சூத்திரம் இருக்கிறது. அதற்கமைய, இதுவரையில், நூற்றுக்கு 4 என்ற விகித எல்லையை மீற நடவடிக்கை எடுத்ததில்லை. பஸ் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமெனில் எரிபொருள் விலை 35 – 40 ரூபாவால் வீழ்ச்சியடைந்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறானதொரு வீழ்ச்சி இன்னும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, பஸ் கட்டணம் தொடர்பில் என்னால் தனித்து தீர்மானங்களை எடுக்க முடியாது. ஏனைய பஸ் உரிமையாளர்கள் சங்கத்துடன் கலந்துரையாட வேண்டும். அடுத்த மாதம் டீசல் விலை அதிகரிக்கப்பட்டால் மீண்டும் பஸ் கட்டணத்தை அதிகரிக்க நேரிடும். எனவே, இதில் பாரதூரமான பிரச்சினை இருக்கிறது.

பஸ் உரிமையாளர்களின் அனுமதி இதற்கு மிகவும் அத்தியாவசியமானதாகும். நிவாரணம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு கோரிக்கை முன்வைப்போம். இரண்டு அல்லது மூன்று நாட்களில் எங்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்தால் மக்களுக்கு நாங்கள் நிவாரணம் வழங்குவோம்.

# முட்டை இறக்குமதியால் பரவும் 'எவியன் இன்புளுவன்சா' நோய்

## கால்நடை வைத்திய அதிகாரிகள் எச்சரிக்கை

(கே. சுபானி)

முட்டை இறக்குமதியால் நாட்டில் 'எவியன் இன்புளுவன்சா' எனும் வைரஸ் பரவும் அபாயம் இருப்பதாக அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைவர் கால்நடை வைத்தியர் சிசிர பியசிறி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரசின் தலையீட்டுடன் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

உள்ளூர் சந்தையில் முட்டைக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு மற்றும் முட்டை விலை அதிகரிப்பு காரணமாக நுகர்வோர் எதிர்நோக்கியுள்ள அசௌகரியங்களை நிவர்த்திக்கும் வகையில் அமைச்சரவையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

முட்டை இறக்குமதியால் நாட்டில் வைரஸ் பரவும் அபாயமுள்ளது. இதனால் முட்டை இறக்குமதி தொடர்பில் அரசு எடுத்துள்ள முடிவை மீள்பரிசீலனை செய்யவேண்டும்.

'எவியன் இன்புளுவன்சா' நாட்டில் பரவுவதைத் தடுப்பதற்கு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் பாரிய பங்காற்றிவருகிறது.

நாட்டில் 'எவியன் இன்புளுவன்சா' வைரஸ் பரவலை தடுப்பதற்கு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்துடன் பல பிரிவினர் இணைந்துள்ளனர். மேற்படி வைரஸ் நாட்டில் பரவினால் பாரிய சிக்கலை ஏற்படுத்தும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# டீசல் - மண்ணெண்ணெய் விலை குறைப்பு

நாட்டில் ஓட்டோ டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றுக்கான விலை நேற்று முன்தினம் (02) நள்ளிரவுமுதல் அமுலுக்கு வரும்வகையில் குறைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஓட்டோ டீசலின் விலை 15 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று மண்ணெண்ணெயின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

அதன்பிரகாரம் ஒரு லீற்றர் ஓட்டோ டீசலின் புதிய விலை 405 ரூபா என்பதுடன் ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் புதிய விலை 355 ரூபாவாகும்.

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனமும் ஓட்டோ டீசலின் விலையை 15 ரூபாவாலும் மண்ணெண்ணெயின் விலையை 10 ரூபாவால் குறைத்துள்ளது.

# பாதாளக் குழு உறுப்பினர்கள் 10 பேர் டுபாய் நாட்டில்

(கே. சுபானி)

டுபாயில் பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த 10 பேர் இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேற்படி பாதாள உலகத் தலைவர்களை இலங்கைக்கு நாடு கடத்துவதற்கான வழிமுறைகளை டுபாய் சட்டமா அதிபருக்கு அனுப்புவதற்கான நடவடிக்கையை அரசு முன்னெடுத்துள்ளது.

டுபாய் அரசால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட பாதாள உலகத் தலைவரொருவர் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தமையால் மேற்படி பாதள உலகத் தலைவர்களை நாடு கடத்துவது தடைப்பட்டிருந்தது.

இதுதொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபை டுபாய் அரசிடம் முன்வைத்த கோரிக்கைக்கமைய மேற்படி பாதாள உலகத் தலைவர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்படுவது தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### தேர்தல் வேண்டாம்!...

இதற்கிடையில், தேர்தல் கோரிக்கையில் சீர்குலைக்கும் கூறுகள் இருப்பதாக மனுதாரர் மேலும் கூறினார். தற்போதைய சூழ்நிலைகள் அத்தகைய தேர்தலை நடத்துவதற்கு உத்தரவாதம் அளிக்கவில்லை என்றாலும் முற்றிலும் அரசியல் நோக்கங்கள் மற்றும் நிகழ்ச்சிநிரலால் இயக்கப்படுகிறது, உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு மீது தேவையற்ற செல்வாக்கை செலுத்த முயற்சிப்பதாக அவர் தெரிவித்தார்.

### மார்ச் 4இல் தேர்தல்!...

பிரதேச சபைகள், நகர சபைகள் மற்றும் மாநகர சபைகள் என 340 உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் ஓராண்டு நீடிக்கப்பட்டது.

இதன்படி 2023 மார்ச் 20ஆம் திகதிக்குள் புதிய சபைகள் நிறுவப்பட வேண்டும்.

அதேபோல் தேர்தலை நடத்துவதற்கான நிதியையும், திறைசேரியிடமிருந்து தேர்தல் ஆணைக்குழு கோரியுள்ளது.

### தேர்தலை நடத்தினால்...

இவ்வாறான நிலையில் தனியார்துறையினர் மட்டும் நெல்லைக் கொள்வனவு செய்தால் விரைவில் விலை குறைந்து விவசாயிகள் நெருக்கடிக்குள்ளாவார்கள் என அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறுபோகத்தின்போது நல்ல அரிசி கிடைப்பதால் பெரும்போகத்தின்போது நெல் விளைச்சல் அதிகரிக்கும் என விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான நிலையில் அரசுக்கு நெல்லுக்கான உத்தரவாத விலையை நிர்ணயித்து கொள்வனவு செய்யமுடியாமல் போனால் நெற்சந்தை வீழ்ச்சியடையும். இதனால் அரிசிக்கான கேள்வி ஏற்பட்டு, அரிசியின் விலை உயரும் அபாயம் ஏற்படும் என நிதியமைச்சின் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### தினேஷின் கொலை தொடர்பில்...

அவற்றை அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்ப கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் (02) அனுமதி வழங்கியிருந்தது.

அதனடிப்படையில், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கோரிக்கைக்கிணங்க தினேஷ் ஷாப்டரின் இரத்த மாதிரி, நகங்கள் உள்ளிட்ட உடற்கூறுகள் மற்றும் சம்பவ இடத்தில் கிடைக்கப்பெற்ற ஆதாரங்கள் தொடர்பில் மரபணு பரிசோதனை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

பிரபல வர்த்தகர் தினேஷ் ஷாப்டர் பொரளை பொது மயானத்திற்கு அருகில் காருக்குள் கைகள் கட்டப்பட்டு, கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் கடந்த 15ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டார். கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அன்றிரவே உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஷாப்டரின் இரத்த மாதிரிகள், நகங்கள் உட்பட உடற்பாகங்கள் மற்றும் சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து விசாரணை அதிகாரிகளால் திரட்டப்பட்ட ஆதாரங்கள் உள்ளிட்டவற்றை டீஎன்ஏ பரிசோதனைக்காக அரச இரசாயன பகுப்பாய்வகத்துக்கு அனுப்புமாறு கொழும்பு மேலதிக நீதவான் ரஜிந்ரா ஜயசூரிய நேற்றுமுன்தினம் (02) குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இதுகுறித்த மனுவொன்றை தாக்கல் செய்து விடுத்துள்ள கோரிக்கைக்கமையவே நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

### மின் கட்டண அதிகரிப்பு...

உத்தேச கட்டண திருத்தம் குறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

தேவைகள், முன்மொழியப்பட்ட கட்டண அமைப்பு, எரிசக்தி முன்னறிவிப்பு மற்றும் நிதி குறித்து அமைச்சர்களுக்கு விளக்கமளித்ததாக அவர் கூறினார்.

அமைச்சரவையின் முன்மொழிவுகள் தொடர்பான அவதானிப்புகளை சமர்ப்பிப்பதற்கான தீர்மானம் ஒரு வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜேசேகர தெரிவித்தார்.

### குமார் நடேசனுக்கு...

பிரவாசி பாரதிய திவாஸ் (PBD) மாநாட்டின் 17ஆவது விருது வழங்கல் 2023 ஜனவரி 8-10 வரை மத்திய பிரதேசத்தின் இந்தூரில் நடைபெறவுள்ளது. பிரவாசி பாரதிய திவாஸ் கொண்டாட்டங்களின் பாராட்டு அமர்வில் இந்திய குடியரசுத் தலைவரால் பிரவாசி பாரதிய சம்மன் விருதுகள் வழங்கப்படும்.

உலகமெங்கிலும் 27 பேர் இந்த விருதுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

### தேர்தலுக்கு ஐ.தே.க. எதிர்ப்பு...

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று (03) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் இளைஞர்கள் ஒரு முழுமையான மாற்றத்திற்காக, ஒரு சமூக மாற்றத்திற்காக எதிர்பார்த்திருந்தனர். இளைஞர்கள் பணம் அச்சிடப்படும் சகாப்தத்திற்காக காத்திருக்கவில்லை. பணத்தை அச்சிட்டு, பொதுமக்களை ஏமாற்றும் காலம் இதுவல்ல. மேலும் இளைஞர்கள் முழுமையான மாற்றத்தை எதிர்பார்த்தனர். அதனால்தான் 225 அரசியல்வாதிகளையும் அவர்கள் நிராகரித்திருந்தனர். 225 பேரையும் நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை இளைஞர், யுவதிகள் முன்னெடுத்திருந்தனர்.

இவ்வாறான நிலையில், தேர்தலை நடத்தி, அதிக பணத்தை அச்சிட்டு, நாட்டை அராஜக நிலைக்குத் தள்ள எதிர்க்கட்சிகள் நினைத்தால், அது மிகவும் துரதிர்ஷ்டவசமான நிலையாகும். ஏறக்குறைய மூன்றாண்டுகளாக சுற்றுலாத்துறை முற்றிலுமாக நலிவடைந்துள்ளதால், மக்கள் பொருளாதாரத்தில் அதலபாதாளத்தில் விழுந்து, வங்கிக் கடனை செலுத்த முடியாமல் மக்கள் தவித்து வருகின்றனர். இப்போது படிப்படியாக சுற்றுலாப் பயணிகள் வருவதால், மக்களின் எதிர்பார்ப்பு மீண்டும் வளரத்தொடங்கியுள்ளது.

அவ்வாறான நிலையில், எதிர்க்கட்சிகள் 8,000 உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு சம்பளம் வழங்கும் நிலைமையை எதிர்பார்த்தால், அதன் விளைவாக, நாடு மீண்டும் பொருளாதாரப் படுகுழியில் விழும், இது சுற்றுலாத் துறையையும் பாதிக்கும்.

சுற்றுலாப் பயணிகளின் வருகை குறையலாம். அது மாத்திரமன்றி வாகனக் குத்தகை மற்றும் வங்கிக் கடனைச் செலுத்த முடியாதவர்கள் எதிர்காலத்தில் இக்கட்டான காலத்தை சந்திக்க நேரிடும். எதிர்க்கட்சிகள் எந்த விடயத்திலும் கவனம் செலுத்தாமல், தேர்தலுக்காக மட்டுமே நிற்கிறார்கள் என்றால், பொதுமக்கள் அது குறித்து கவனம் செலுத்த வேண்டும் - என்றார்.

### யாழிலிருந்து கொழும்புக்கு ...

வடமாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு யாழ்ப்பாணத்துக்கான புகையிரத சேவை, வவுனியா - அநுராதபுரம் பாதை திருத்தவேலை காரணமாக குறைந்தது ஆறு மாதங்களுக்கு இடைநிறுத்தப்படவுள்ளது.

அதனால் வீதி பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு புகையிரதத் திணைக்களத்தினருடன் இணைந்து சில மாற்று நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றோம்.

அந்தவகையில் குறிப்பாக, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, இலங்கை போக்குவரத்து சபை, புகையிரதத் திணைக்களம், வடமாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையுடன் இணைந்து என்ன மாற்றங்களை செய்யலாம் என்பதை தீர்மானித்து மூன்று வகையான தீர்மானங்களை எடுத்திருக்கின்றோம்.

1. யாழ்ப்பாணத்திலிருந்து செல்கின்ற யாழ். ராணி தற்பொழுது முறிகண்டி வரை பயணிக்கின்றது. வவுனியா வரை செல்வதற்கு ஒழுங்குசெய்யப்பட்டிருக்கின்றது.

வவுனியாவிலிருந்து அநுராதபுரம் சென்று புகையிரதத்தில் கொழும்பு செல்ல விரும்புவோருக்காக வவுனியா அநுராதபுரத்திற்கு 20 பஸ்கள் மேலதிகமாக சேவையில் ஈடுபடவுள்ளன.

2. தனியார் போக்குவரத்து சேவை மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்கள் அந்தந்த மாவட்டத்திலிருந்து நேரடியாக அநுராதபுரத்திற்கு சென்று அங்கே பயணிகளை செல்லக்கூடியவாறு ஒழுங்கு செய்திருக்கின்றோம்.

நேரடியாக பஸ்களில் கொழும்புக்கு செல்லக்கூடியவாறான ஏற்பாடுகளும் செயற்படு கின்றன. குறிப்பாக, நேரடியாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு பல குளிரூட்டப்பட்ட பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன.

தற்பொழுது 38 பஸ்கள் யாழ்ப்பாணத்திலிருந்து நேரடியாக கொழும்புக்கு சேவையில் ஈடுபடுகின்றன. அவைகள் தங்களுக்கு ஏற்ற முன்பதிவுகளை மேற்கொண்டு வருகின்றன.

அதை விட மேலதிகமாக 33 குளிரூட்டப்பட்ட பஸ்கள் இருக்கின்றன. அந்த பஸ்களும் தற்போது கடந்த கால கொரோனா மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சேவைகளில் ஈடுபடவில்லை. அந்த 33 பஸ்களையும் மீண்டும் சேவையில் ஈடுபடுமாறு அதனோடு தொடர்புடையவர்களை கோரியுள்ளோம்.

எனவே, உயர்ந்த சேவை நிறுத்தப்பட்டாலும் பொதுமக்களுக்கான போக்குவரத்து சேவைகள் தடைப்படாது செயல்படுத்துவதற்கு முயற்சிக்கின்றோம் - எனத் தெரிவித்தார்.

### சீனாவுடன் வர்த்தக ஒப்பந்தம்...

வியட்நாம், சிங்கப்பூர், சீனா, மலேசியா போன்ற அனைத்து நாடுகளும் பெருமளவு சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களில் கைசாத்திட்டுள்ளன. அவ்வாறு நாம் செய்யாவிட்டால் ஏனைய நாடுகளுக்கு தீர்வை வரிக்கான நிவாரணத்துடன் பொருட்கள் கிடைக்கும்போது, அந்த சந்தையில் எமது உற்பத்தியாளர்களினால் போட்டியிட முடியாத நிலை ஏற்படும் என்று அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார் .

நாரஹேன்பிட்டியிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (03) இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனை குறிப்பிட்டார்.

இவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் அந்நிய செலாவணி இருப்பு வீழ்ச்சியே தேசிய பிரச்சினையாகவுள்ளது. எமது வெளிநாட்டுக் கடன் தவணை மற்றும் வட்டி செலுத்த முடியாமையின் காரணமாக 75 ஆண்டுகளின் பின்னர் தீர்மானமிக்கதொரு காலகட்டத்திலேயே நாம் இருக்கிறோம். சர்வதேச கொடுக்கல், வாங்கல்களின்போது, சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்களான மூடி, பிட்சரேட் போன்ற நிறுவனங்கள் தரப்படுத்தலில் இலங்கையை கீழிறக்கியுள்ளன. எனவே, இதற்கு அரசியல் ரீதியாக அரசியல்வாதிகளால் தீர்வு கூறமுடியாது.

எமது கடன் கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட நாடுகள் ஏற்றுக்கொள்ளாவிட்டால், அத்தியாவசியப் பொருட்களாக இருந்தாலும் யார் ஆட்சியிலிருந்தாலும் அந்தப் பொருட்களை இறக்குமதி செய்ய முடியாது. நாட்டுக்கு இருக்கும் வெளிநாட்டுச் சொத்துகளின் பெறுமதியின் அடிப்படையிலேயே பொருள் இறக்குமதிக்கான வாய்ப்புகள் தீர்மானிக்கப்படுகின்றன. தலா வெளிநாட்டு சொத்துகளில் இறக்குமதி வாய்ப்பு குறிக்காட்டியின் அடிப்படையில் முடிவு செய்யப்படுகிறது. அதாவது, நாட்டில் தலா வெளிநாட்டு சொத்துகளில் இறக்குமதிக்கான வாய்ப்பு கிடைக்க வேண்டுமானால், குறைந்த மூன்று மாதத்துக்கான வெளிநாட்டுச் சொத்து இருக்க வேண்டும்.

அநேகமான அபிவிருத்தியடைந்த நாடுகளில் இறக்குமதி செய்வதற்கான வாய்ப்புகள் பல மடங்குகளாக இருக்கின்றன. ஆனால், எமக்கு நிலைமை அவ்வாறில்லை. எனவே, முடிந்தளவு வெளிநாட்டு வருமானத்தை அதிகரித்துக்கொள்வதும், நாட்டிலிருந்து அந்நிய செலாவணியை குறைத்தல், வெளிநாட்டு சொத்துகளை அதிகரித்து அவற்றை பாதுகாப்பதே இதற்கு தற்போதிருக்கும் முக்கிய தீர்வாகும். மாறாக, அரசியல் தீர்மானங்களினூடாக இதற்கு தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது.

தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியின் மத்தியில், எரிபொருள் உரம், இரசாயன பொருட்கள், மருந்துகள், தொழிற்சாலைகளுக்கு தேவையான மூலப்பொருட்கள், இயந்திரங்களை இறக்குமதி செய்வதற்காக கடனை மறுசீரமைத்து அவற்றை மீள் செலுத்தும் முறையொன்றை தயாரித்து ஏதாவதொரு முறையில் எமது வெளிநாட்டு வருமானத்தை அதிகரித்துக்கொள்ளாவிட்டால் நாடு மேலும் நெருக்கடிக்குள்ளாகும்.

அதற்காக, மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சு, இந்தப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ள தனியார் நிறுவனங்கள் இந்த வருடத்தில் முழு முயற்சியை எடுக்கவுள்ளன. நாம் விரும்பியோ விரும்பாமலோ விரைவாக சர்வதேச சந்தைக்குள் பிரவேசித்து ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டுமெனில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களில் கைசாத்திட வேண்டும்.

வியட்நாம், சிங்கப்பூர், சீனா, மலேசியா போன்ற அனைத்து நாடுகளும் பெருமளவு சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களில் கைசாத்திட்டுள்ளன. அவ்வாறு நாம் செய்யாவிட்டால் ஏனைய நாடுகளுக்கு தீர்வை வரிக்கான நிவாரணத்துடன் பொருட்கள் கிடைக்கும்போது, அந்த சந்தையில் எமது உற்பத்தியாளர்களினால் போட்டியிட முடியாத நிலை ஏற்படும்.

அதன் காரணமாகவே மீன்பிடி துறைசார் அமைச்சர், சீன சந்தையில் முன்வைக்கப்படும் பொருட்களின் தர பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக சீன அரசாங்கத்துடன் ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுவதற்காகவே அமைச்சரவைப் பத்திரமொன்றையும் சமர்ப்பித்துள்ளார். எமது ஏற்றுமதியை குறைந்தது 20 முதல் 25 பில்லியன் டொலர்களாக அதிகரித்துக்கொள்ள முடியுமாக இருந்தால் இந்த நெருக்கடி நிலைமைக்கு தீர்வை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் - என்றார்.

### தொழிற்சங்க எதிர்ப்புக்கு...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (03) இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே இதனை குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்,

புகையிரதத் திணைக்களத்திலுள்ள 60 வயது பூர்த்தியான ஊழியர்கள் ஓய்வுபெற்றுள்ள நிலையில், ஒப்பந்த அடிப்படையில் அவர்களை சேவைக்கு இணைத்துக்கொள்ளுமாறு அறிவித்துள்ளோம். இது ஒருதினத்தில் நிறைவேறாது. சில தினங்களாகும். இந்த பிரச்சினைக்கு நேரடி பதில் வழங்க முடியாது. நீண்ட நாட்களாக இருந்துவரும் பிரச்சினைகளுக்கு குறுகிய காலத்தில் தீர்வு வழங்க முடியாது.

பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காவிட்டால் 10ஆம் திகதிமுதல் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக ஊழியர்கள் அறிவித்திருக்கிறார்கள். இது நீதியான விடயமல்ல. பாவகரமான செயற்பாடாகும். 10ஆம் திகதி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போகிறார்கள் அதனால் உடனடியாக ஊழியர்களை இணைத்துக்கொள்ளுமாறு வலியுறுத்துகிறார்கள். அவர்கள் கூறுவதுபோன்று எனக்கு அதிகாரம் இல்லை.

அமைச்சர் என்ற அடிப்படையில் நாட்டின் சட்டத்தை மதித்து இணைத்துக்கொள்ள வேண்டியவர்களின் விபரத்தை அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளோம். அமைச்சரவையில், அரச நிறுவனங்கள் தொடர்பான உபகுழுவொன்று இருக்கிறது. அந்தக் குழுவின் பரிந்துரைகளை பெற்றுக்கொண்டு அந்த பரிந்துரைகளுக்கான அனுமதியை அரச சேவை ஆணைக்குழுவிலேயே பெற்றுக்கொள்ள வேண்டும். ஆணைக்குழு அனுமதி வழங்காவிட்டால் அமைச்சரவைத் தீர்மானத்தினூடாக அவர்களை சேவைக்கு இணைத்துக்கொள்ள முடியாது. 10ஆம் திகதி தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட போகிறார்கள் என்பதற்காக நியமனங்களுக்கு அனுமதியை பெற்றுக்கொடுக்குமாறு ஆணைக்குழுவை கட்டாயப்படுத்தும் அதிகாரம் அமைச்சர்களுக்கு இல்லை. ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தன்மையை எங்களால் மீற முடியாது.

ஓய்வூதியர்களை மீண்டும் ஒப்பந்ததாரர்களாக இணைத்துக்கொள்வதனூடாக இரண்டு கொடுப்பனவுகள் செலுத்தவேண்டி நிலை ஏற்படும் என்றால் அதுதொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஒப்பந்ததாரர்களாக இணைத்துக்கொள்வதால் செலவுகள் அதிகரிக்கும். எனவே, அரச சேவையிலுள்ள புகையிரதத் திணைக்களத்துக்குள் இணைத்துக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம் - என்றார்.

# இலங்கையில் நடந்த போராட்டத்தின் பின்னணியில் றோ மற்றும் சி.ஐ.ஏ!


## எல்லே குணவங்ச தேரர் தெரிவிப்பு

இலங்கையில் அரசாங்கத்திற்கு எதிராக நடந்த போராட்டத்தின் பின்னணியில் சர்வதேச சூழ்ச்சிகள் இருந்ததாக எல்லே குணவங்ச தேரர் தெரிவித்துள்ளார்.

சிங்கள தொலைக்காட்சி ஒன்றில் நேற்று ஒளிப்பரப்பான கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

போராட்டத்தில் நேர்மையாக ஈடுபட்டவர்களும் இருந்தனர். போர்ன் எகெய்ன் என்ற கிறிஸ்தவ குழு போராட்டத்தை வழிநடத்திய பெரிய தரப்பாக இருந்தது. அத்துடன் சர்வதேச புலம்பெயர் அமைப்புகளும் காலிமுகத்திடல் போராட்டத்திற்குள் இருந்தன. இவை போராட்டத்திற்கு நிதியுதவி அளித்தன.

நாட்டை ஸ்திரமற்ற நிலைமைக்கு கொண்டு செல்லும் தேவை சர்வதேசத்திற்கே அதிகளவில் இருந்தது. போராட்டம் நடைபெற்றபோது இந்தியாவின் றோ மற்றும் அமெரிக்காவின் சி.ஐ.ஏ. ஆகியன மிகப்பெரிய பங்களிப்பை வழங்கின. இந்த புலனாய்வு அமைப்புகள்



தற்போது ஒன்றாக செயற்பட்டு வருகின்றன.

போர்ன் எகெய்ன் என்ற கிறிஸ்தவ பிரிவு 80ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு வந்த அமெரிக்க கிறிஸ்தவ பிரிவு. இந்த பிரிவு நாட்டை ஸ்திரமற்ற நிலைமைக்கு கொண்டு செல்வதில் பொறுப்பை நிறைவேற்றியது என்று எனக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கும்போது இந்த கிறிஸ்தவ மதப்பிரிவு நிறுவனங்களுக்குள் நுழைந்தது. ஒருவர் வெளிவிவகார அமைச்சின் செயலாளராக பதவிக்கு வந்தார்.

முழு போராட்டத்தையும் முன்னெடுப்பதில் புலப்படாத சக்தியாக போர்ன் எகெய்ன் மதப் பிரிவை சேர்ந்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் செயற்பட்டார். சர்வதேச ஆக்கிரமிப்பின் மூலம் போராட்டத்தை போலவே நாட்டின் வளங்களையும் கொள்ளையிட முயற்சித்தனர் எனவும் எல்லே குணவங்ச தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பேச்சு நடத்த வருமாறு யாழ்.மாநகர உறுப்பினர்களுக்கு ஆளுநர் அழைப்பு

யாழ்ப்பாணம் மாநகர சபையில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பில் நேரில் ஆராய வருமாறு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, மாநகர சபை உறுப்பினர்களுக்கு கடிதம் மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நாளை 5ஆம் திகதி காலை கட்சி ரீதியாக உறுப்பினர்களை சந்திக்கும் நோக்குடன், ஒவ்வொரு கட்சி உறுப்பினருக்கும் ஒவ்வொரு நேரம் குறிப்பிட்டு ஆளுநர் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வரினால் கடந்த மாதம் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் சபை உறுப்பினர்களால் தோற்கடிக்கப்பட்ட நிலையில், அதனை திருத்தங்களுடன் சபையில் சமர்ப்பிக்காது 31ஆம் திகதி நள்ளிரவுடன் மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இந்நிலையில், புதிய முதல்வருக்கான தெரிவு மாநகர சபை கட்டளை சட்டத்தின் பிரகாரம் நடத்த முடியாத நிலைமை காணப்படுவதாகவும், அது தொடர்பில் ஆலோசனைகளைப் பெற சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தி உள்ளதாகவும் உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், யாழ். மாநகர சபை உறுப்பினர்களை தனித்தனியாக கட்சி ரீதியாக சந்திப்பதற்கு ஆளுநர் அழைப்பு விடுத்துள்ளார்.

# திருவடிநிலை கடலில் மீனவரின் சடலம் மீட்பு

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட திருவடிநிலை கடலில் மிதந்து வந்த நிலையில், மீனவர் ஒருவருடைய சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த மீனவர் நேற்று முன்தினம் கடற்றொழிலுக்கு சென்ற நிலையில், தண்ணீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உறவினர்கள் சடலத்தை வீட்டுக்கு எடுத்துச் செல்ல முற்பட்டவேளை கடற்படையினருக்கும் உறவினர்களுக்கும் இடையே முரண்பாடு தோன்றியுள்ளது.

எவ்வாறாயினும், இறுதியில் அவர்கள் சடலத்தை வீட்டிற்கு எடுத்து சென்றுள்ளனர்.

சுழிபுரம் - காட்டுப்புலம் பகுதியைச் சேர்ந்த கணபதி தவம் (வயது 58) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விடுதி அறையில் மர்மமாக மரணித்துக் கிடந்த மாணவன்

ஹோமாகம - தியகம தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வந்த மாணவன் தான் தங்கியிருந்த விடுதியில் மர்மமான முறையில் இறந்துள்ளதாக கஹத்துடுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குருநாகல் மாவட்ட பொத்துஹெர, கட்டுபொத்த, நந்தனகெதர என்ற முகவரியை சேர்ந்த 25 வயதான நவும்பாலகே மலித் யயோத என்ற இரண்டாம் ஆண்டு மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த மாணவன் விடுமுறையில் வீட்டுக்கு சென்று நேற்று முன்தினம் பல்கலைக்கழகத்திற்கு திரும்பியுள்ளார். இவருடன் விடுதியில் தங்கியிருந்த மற்றைய மாணவன் விடுமுறைக்கு சென்று திரும்பாத நிலையில், இந்த மாணவன் மாத்திரம் அறையில் இருந்துள்ளார்.

நேற்றுப் பகல்வரை மாணவன் அறையில் இருந்து வெளியில் வராத காரணத்தினால், மாணவனின் மற்றுமொரு நண்பன் அறைக்கு அருகில் சென்று பார்த்தபோது மாணவன் உறங்குவதை கண்டுள்ளார். பின்னர் அவர் அறைக்குள் சென்று மாணவனை எழுந்திருக்குமாறு கூறியுள்ளார்.

மாணவன் பதிலளிக்காத காரணத்தினால், அருகில் சென்று உடலை தொட்டு பார்த்துள்ளார். உடல் சில்லிட்டுப்போய் இருந்ததால், அது குறித்து பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கு அறிவித்து, பின்னர் மாணவனை சிகிச்சைக்காக ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

அப்போது உடலை பரிசோதித்த வைத்தியர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாகக் கூறியுள்ளனர்.

குறித்த மாணவனின் மரணத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. மரணம் தொடர்பான விசாரணைகளை ஹோமாகம திடீர் மரண விசாரணை அதிகாரி சிந்தன உதயகுமார மேற்கொண்டுள்ளார். இச்சம்பவம் குறித்து கஹத்துடுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆசிரியர்களின் தற்காலிக இணைப்பை நீடிக்கும் விடயம்

## கல்வி அமைச்சின் செயலருக்கு ஆசிரியர் சேவை சங்கம் கடிதம்

ஆசிரியர்களின் தற்காலிக இணைப்பை நீடிப்பது தொடர்பாக கல்வி அமைச்சு செயலாளருக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக ஆசிரியர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.




மேற்படி விடயம் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் நேற்று செவ்வாய்க்கிழமை அன்று கல்வி அமைச்சு செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகவும் பிரதீப் தெரிவித்துள்ளார்

மூன்றாம் தவணை வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை தொடர்ச்சியாக நடத்திச் செல்வதற்கு ஆசிரியர்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

இதில் போக்குவரத்து மற்றும் சுகாதார பிரச்சினைகள் காரணமாக ஆசிரியர்களுக்கு 2022.12.31ஆம் திகதிவரை வழங்கப்பட்டிருந்த தேசிய மற்றும் மாகாண தற்காலிக இணைப்பை 2023 மார்ச் 24ஆம் திகதிவரை நீடிப்பதற்கான கோரிக்கை தொடர்பாக சங்கமானது உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகின்றது.

கல்வி அமைச்சு செயலாளரால் ஊடக அறிக்கையின் மூலம் வெளியிட்ட அறிக்கையானது சட்ட ரீதியான பூரணமான கடிதம் இல்லை என்பதையும் மாகாண கல்விப் பணிப்பாளர்கள் இக்கடித்தை ஏற்றுக் கொள்ளாமல் பல்வேறுபட்ட அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் காரணமாக தற்காலிக இணைப்பில் இருக்கும் ஆசிரியர்கள் கடுமையான அசௌகரியங்களுக்கு ஆளாகியுள்ளனர். இங்கு கல்வி அமைச்சு வெளியிட்ட ஊடக அறிக்கையானது சட்டரீதியற்றது எனவும் இதற்கு தகுந்த கடிதத்தை கல்வி அமைச்சு செயலாளரின் கையெழுத்துடன் வெளியிடும்படியும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கோரிக்கை விடுத்துள்ளதாக தேசிய அமைப்பாளர் பிரதீப் தெரிவித்துள்ளார்.







உலக மண் தினத்தை முன்னிட்டு எதிர்காலத்தை நோக்கி சுற்றுச்சூழல் கழகமும் பாடசாலை சுற்றாடல் கழகமும் இணைந்து, கொக்குவில் ஸ்ரீ ராமகிருஷ்ணா வித்தியாசாலை பாடசாலை மாணவர்கள் மத்தியில் பல்வேறு போட்டி நிகழ்வுகளை நடத்தியதுடன், வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நேற்று பாடசாலை அதிபர் கே.திலீபன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக முன்னாள் மத்திய கல்வி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் க.பத்மானந்தன் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கிவைத்து சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ஆசிரிய ஆலோசகர் ப.அருந்தவம் மற்றும் கழக உறுப்பினர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வருமான வரி விவகாரத்தில் ஜனவரி 23இல் ஆர்ப்பாட்டம் நடத்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நடவடிக்கை

வரிமான வரி அதிகரிப்பு தொடர்பில் தாங்கள் முன்வைத்துள்ள கரிசனைகளுக்கு அரசாங்கம் உரிய பதிலை வழங்காவிட்டால் ஜனவரி 23ஆம் திகதி முதல் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடப்போவதாக (கறுப்பு ஆர்ப்பாட்ட வாரம்) அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவை சந்தித்த பின்னர் அரச மருத்துவம அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித அலுத்கே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இந்த விடயத்தை ஜனாதிபதியுடன் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் இன்று (4) திகதி பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளதாக ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தையில் சாதகமான பதில் கிடைக்காவிட்டால் ஏற்கனவே திட்டமிட்டபடி 23ஆம் திகதி ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்போம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை முன்னர் ஒருபோதும் இல்லாத பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டுள்ள நிலையில், அரச வருமானத்தை அதிகரிப்பதற்காக அரசாங்கம் தனியார் வருமான வரியை அதிகரித்துள்ளது. இது ஜனவரி முதலாம் திகதிமுதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

# கட்டுத்துவக்கில் சிக்கி ஒருவர் பலி – ஒருவர் காயம்

## இப்பலோகமவில் சம்பவம்

(அநுராதபுரம் செய்தியாளர் )

காட்டு மிருகங்களை வேட்டையாடுவதற்காக கட்டப்பட்டிருந்த கட்டுத்துவக்கில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், காயமடைந்த மேலும் ஒருவர் சிகிச்சைக்காக தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக இப்பலோகம பொலிஸார் தெரிவித்தனர்.

இப்பலோகம - காமினிஹல்மில்லேவ பகுதியில் நேற்றுக் காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இப்பலோகம - காமினிஹல்மில்லேவ பகுதியை வசிப்பிடமாக கொண்ட 49 வயதுடைய ஒருவரே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தில் உயிரிழந்த நபருடய சடலம் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.





வரலாற்று சிறப்புமிக்க யாழ். காரைநகர் ஈழத்து சிதம்பரத்தின் திருவெம்பாவை உற்சவத்தின் 07ஆம் நாளுக்கான விசேட அபிஷேக ஆராதனைகள் நேற்று சிறப்பாக இடம்பெற்றன.

கடந்த 28.12.2022 அன்று திருவெம்பாவை நிகழ்வு ஆரம்பமாகிய நிலையில், 07ஆம் நாள் உற்சவம் சிறப்பாக இடம்பெற்றது. பின்னர் வசந்தமண்டபத்தில் இருந்து எழுந்தருளி சிவன் சிதம்பரருக்கும் விசேட தீபாராதனைகள் இடம்பெற்று சமேதராக உள்வீதியூடாக வலம்வந்து வெளிவீதி இடபவாகனத்தில் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். இதனை ஆலய பிரதம குரு வ.வைகந்தகுருக்கள் நடத்திவைத்தார்.

# சந்தேகநபர் சட்டப்பரீட்சைக்கு தோற்ற நீதிமன்றம் அனுமதி

நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரள கொலைச் சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபரான சட்டக்கல்லூரி மாணவர் ஒருவரை சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் எதிர்வரும் 10ஆம் திகதிமுதல் 25ஆம் திகதிவரை திறந்த பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பரீட்சைக்கு தோற்ற அழைத்துச் செல்லுமாறு மஹர சிறைச்சாலை அத்தியட்சகருக்கு அத்தனகல்ல நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொலன்னறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அத்துக்கோரள மற்றும் அவரது தனிப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தரான அஹங்கம விதாரணலாகே ஜயந்த குணவர்தன ஆகியோர் மே 9ஆம் திகதி பிற்பகல் நிட்டம்புவ நகரில் இடம்பெற்ற பொது அமைதியின்மையின் போது கொல்லப்பட்டனர். இந்த இரட்டை கொலைகள் தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ரவிந்து குணவர்தன என்ற சந்தேக நபர் திறந்த பல்கலைக்கழகத்தின் இறுதியாண்டு சட்டக்கல்லூரி மாணவர் எனவும் சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, சந்தேகநபரை இறுதிப் பரீட்சைக்கு தோற்ற தகுந்த உத்தரவு பிறப்பிக்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

வெற்றி நிச்சயம்

“உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னை தொடர்பு கொண்டால், 100% வெற்றி நிச்சயம்” நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, திறமையிருந்தும் வாழ்க்கையில் முன்னேற முடியாமை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, எதிரித்தொல்லை, தீராதநோய், போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, வெளிநாடுசெல்ல, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, கொடுத்த பணம் திரும்பி வர, படிப்பில் மந்தம், விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 48 மணித்தியாலங்களுக்குள் 100% நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொடுப்பேன் என்று உத்தரவாதம் அளிக்கிறேன்.

உலகப் புகழ்பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி.
eba jb . ஸ்ரீமத் சுவாமிஜி–0710192687
h t hh







சுபீட்சமான நாட்டைக் கட்டியெழுப்பும் கொள்கைப் பிரகடனத்துக்கு அமைய தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையில் சேவையாற்றும் ஊழியர்கள் 2023ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் சத்தியப்பிரமாண நிகழ்வு இரத்மலானையிலுள்ள தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தலைவர் நிஷாந்த ரணதுங்க தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சுகாதார மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த உட்பட அமைச்சு மற்றும் சபையின் உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (பேருவளை பி.எம்.முக்தார்)

தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, ஜனவரி 04ஆம் திகதி, புதன்கிழமை

# சமூக சீர்திருத்தங்களை முன்வைத்த பாப்பரசர்

எட்டாண்டுகள் கத்தோலிக்க திருச்சபையின் தலைமைப் பதவி வகித்து, தானாகவே முன்வந்து பதவி ஓய்வை அறிவித்த 95 வயது பாப்பரசர் 16ஆம் பெனடிக்ட், பரிசுத்த ஆவியில் இணைந்திருக்கிறார். வாடிகன் நகரத்தில் உள்ள மாத்தர் எக்லேஸியே துறவிகள் ஆசிரமத்தில் ஞாயிறன்று உலக வாழ்வைத் துறந்த முன்னாள் பாப்பரசர் 16ஆம் பெனடிக்ட், பல சீர்திருத்தங்களை ஏற்றுக்கொண்ட பழைமைவாதி என்று வரலாறு பதிவுசெய்யும்.

பெப்ரவரி 11, 2013இல் கத்தோலிக்கர்களின் வழிபாட்டு மொழியான இலத்தீனில் பாப்பரசர் பதவியிலிருந்து விலகும் முடிவை அவர் அறிவித்தபோது, உலகம் வியப்பில் ஆழ்ந்தது. 120 கோடி மக்களின் நம்பிக்கையாகத் திகழும் கத்தோலிக்கத் திருச்சபையை எட்டு ஆண்டுகள் வழிநடத்திய ஒருவர் உன்னதமான பாப்பரசர் என்கிற தலைமை அங்கீகாரத்தை துறப்பதாக அறிவித்தபோது, உண்மையான துறவறத்தின் எடுத்துக்காட்டாக இருந்தது அந்த முடிவு.

25 ஆண்டுகள் கார்டினல் ஜோசப் ராட்சிங்கராக இருந்தவர், கத்தோலிக்கத் திருச்சபையால் 16ஆம் பெனடிக்ட் என்கிற பெயரில் ஏப்ரல் 19, 2005ஆம் ஆண்டில் பாப்பரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆயிரம் ஆண்டுகளில் பாப்பரசரான முதலாவது ஜேர்மானியர் அவர். அவரைத் தேர்ந்தெடுத்த கார்டினல்கள், பாதுகாப்பான கரங்களில் கத்தோலிக்கத் திருச்சபை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று அறிவித்ததை இப்போது நினைவுகூரத் தோன்றுகிறது.

பாப்பரசர்களின் வரலாற்றில் திருச்சபையின் உன்னத பதவியிலிருந்து விலகியவர்கள் இதற்கு முன்பு ஆறு பேராவர். மார்செலினஸ் (கி.பி. 304), லைபீரியஸ் (கி.பி. 366), 9ஆம் பெனடிக்ட் (கி.பி. 1045), 6ஆம் கிரகோரி (கி.பி. 1046), 5ஆம் பீட்டர் செலஸ்டின் (கி.பி. 1294), 12ஆம் கிரகோரி (கி.பி. 1415) ஆகியோரே அவர்கள். அவர்களில் 600 ஆண்டுகளுக்கு முன்பு, தானே முன்வந்து பதவியைத் தியாகம் செய்தவர் 5ஆம் செலஸ்டின் மட்டும்தான்.

‘‘உடல்நிலை ரீதியாகவும், மனதளவிலும், வகிக்கும் பொறுப்பை முழுமையாக நிறைவேற்ற இயலவில்லை என்று தோன்றினால் அந்தப் பதவியிலிருந்து விலகும் உரிமையும், கடமையும் பாப்பரசருக்கு உண்டு’’ என்று பதவி விலகுவதற்கு மூன்றாண்டுகளுக்கு முன்பே 16ஆம் பெனடிக்ட் தெரிவித்திருந்தார். 78 வயதில் இரண்டாம் ஜோன் போலைத் தொடர்ந்து இரண்டு நாட்கள் கலந்தாய்வுக்குப் பிறகு போப்பாண்டவராக கார்டினல் ஜோசப் ராட்சிங்கர் 2005 ஏப்ரல் 19ஆம் திகதி தேர்ந்தெடுக்கப்பட்டார். ரோமாபுரியிலுள்ள சென்.பீட்டர் தேவாலயத்தில் விசுவாசிகளுக்கு காட்சியளித்த 16ஆம் பெனடிக்ட், ‘‘இறைவனின் திராட்சைத் தோட்டத்தை பாதுகாக்கும் காவலனாக சாதாரண ஊழியனாக செயற்படுவேன்’’ என்று அறிவித்ததையும் நினைவுகூர முடிகிறது.

நவீன உலகத்துக்கேற்ப திருச்சபையில் 16ஆம் பெனடிக்ட் ஏற்படுத்திய மாற்றங்கள் நிறையவே உண்டு. தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்த முதல் பாப்பரசர் என்பதுடன், புத்தகங்கள் எழுதுவது, உரையாற்றுவது, ட்விட்டர் மூலம் கருத்துகளை வெளியிடுவது என்று மாறிவரும் தொழில்நுட்ப உலகத்துக்கு ஏற்ப திருச்சபையை தகவமைத்ததில் அவரது பங்கு கணிசமானது.

‘‘கடவுள் என்பதும், இறைநம்பிக்கை என்பதும் முட்டாள்தனமல்ல. பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டதும் அல்ல’’ என்று ஆணித்தரமாக உரைத்ததுடன் நில்லாமல், ‘‘மத உணர்வு தனிமனிதன் சார்ந்தது என்று ஒதுக்கப்படக்கூடியதல்ல’’ என்பதிலும் தெளிவான கருத்தைக் கொண்டிருந்தார். ‘‘கத்தோலிக்கத் திருச்சபையால் மட்டும்தான் வெறித்தனமில்லாத, அன்பு சார்ந்த கிறிஸ்தவ நம்பிக்கையை முன்னெடுத்துச் செல்ல முடியும்’’ என்கிற அவரது கருத்து பிரட்டஸ்டண்டுகளின் கண்டனத்துக்குள்ளானது.

ஏனைய மதங்களுடனான அவரது உறவு, சுமுகமானதாக இருக்கவில்லை. குறிப்பாக, இஸ்லாம் குறித்த அவரது கருத்துகள் விமர்சனத்துக்குள்ளாயின. ஜேர்மானிய நாஜி ஆதரவாளர் ஒருவரை திருச்சபையில் சேர்த்துக்கொண்டது யூதர்களைக் கோபப்படுத்தியது.

16ஆம் பெனடிக்ட் பதவிக்காலத்தில் கிறிஸ்தவ திருச்சபையில் பல பாலியல் குற்றச்சாட்டுகள் எழுந்தன. அயர்லாந்து, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பெல்ஜியம், ஜேர்மனி ஆகிய நாடுகளில் பாதிரிமார் பாலியல் குற்றச்சாட்டுகளில் சிக்கியபோது அவர்களை இடமாற்றம் செய்து காப்பாற்ற முற்பட்டார் என்கிற பழியை அவர் சுமந்தார். அதே நேரத்தில் பாதிப்புக்குள்ளானவர்களை நேரில் சந்தித்து மன்னிப்புக்கேட்ட பெருந்தன்மை, 16ஆம் பெனடிக்ட் பாப்பரசரையே சேரும்.

60க்கும் அதிகமான புத்தங்கள் எழுதியிருக்கும் 16ஆம் பெனடிக்ட், தன்னை ஒரு பேராசிரியராகவும் ஆன்மிக கேள்விகளுக்கு பதிலளிப்பவராகவும் அடையாளப்படுத்திக் கொண்டவர். தன்னுடைய இறுதிக் காலத்தை தனது சொந்த மாகாணமான பவேரியாவில் அமைதியாகக் கழிக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். ஹிட்லரின் நாசி இராணுவத்தால் வலுக்கட்டாயமாக இராணுவத்தில் சேர்க்கப்பட்டபோது அவரது வயது 14. 1945இல் இராணுவத்திலிருந்து வெளியேறி திருச்சபையில் இணைந்தவர் 16ஆம் பெனடிக்ட். ஜேர்மனியில் பல ஆண்டுகள் சமயக் கல்விப் போதகராகவும் 1977இல் மியூனிக் பிஷப்பாகவும் பணியாற்றிய 16ஆம் பெனடிக்ட், அசைக்க முடியாத கிறிஸ்தவ மதநம்பிக்கையாளர். ஆனால், அதையும் மீறிய ஆன்மிகவாதி என்பதை அவர் அளித்த பேட்டி உணர்த்துகிறது.

‘‘இறைவனை அடைய எத்தனை வழிகள் இருக்கின்றன?’’ என்கிற பீட்டர் சிவல்ட் எழுப்பிய கேள்விக்கு 16ஆம் பெனடிக்ட் அளித்த பதில் இதுதான். ‘‘உலகத்தில் எத்தனை மனிதர்கள் இருக்கிறார்களோ, அத்தனை வழிகள் இருக்கின்றன!’’

புனித பாப்பரசர் பெனடிக்ட் புனிதத்துக்கான சரியான கற்பிதத்தைத் தந்துவிட்டுப் போயிருக்கிறார். அத்துடன் எதிர்காலத்திற்கு நல்ல உதாரண புருஷராகவும் நடந்துகொண்டு விடைபெற்றுள்ளார். அவரது நாமம் வத்திக்கான் வரலாற்றில் மட்டுமல்ல, ஒட்டுமொத்த கிறிஸ்தவர்கள் மனங்களிலும் நின்று நிலைத்திருக்கும்.



# என்றும் கொண்டாடப்படுவார் பிரெய்லி!

நீங்க தினமும் செய்ற வேலைகளையே கொஞ்ச நேரம் கண்ணை மூடி செஞ்சு பாருங்க. கஷ்டமா இருக்குல்ல..? நம்மளோட இந்த சில நிமிஷங்கள் மாதிரிதான் பார்வைத் திறன் சவால் உடையவர்களுடைய மொத்த வாழ்க்கையுமே இருக்கும். பார்வைத் திறன் சவால் உடையவங்களுக்குத் தொடக்கத்துல எல்லா விஷயங்களுக்கும் மத்தவங்களோட உதவிய நாடியிருக்க மாதிரியான சூழ்நிலை இருக்கும். போகப் போக எல்லா விஷயங்களையும் யாரோட உதவியும் இல்லாம தாங்களாகவே செய்யப் பழகிக்குவாங்க. ஆனால், ஒரு விஷயத்தை மட்டும் அவங்களால செய்ய முடியாமலே இருந்துச்சு. அதுதான் படிக்கிறது. எல்லா விஷயங்களையும் செய்ய முடிஞ்ச அவங்களால் சுயமா படிக்க மட்டும் முடியலை. கற்றல் அப்படிங்கற விஷயம் ஒருவருடைய பார்வையைப் பயன்படுத்தி செய்யிறதாகத்தான் இருந்துச்சு.


இது இப்படி இருக்க, 1809இல் பிரான்ஸ் நாட்டுல பாரிஸ் நகரத்துக்குப் பக்கத்துல இருக்குற ஒரு சின்னக் கிராமத்துல ஒரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு அவங்க அப்பா - அம்மா லூயிஸ் பிரெய்லின்னு பேர் வச்சாங்க. பிறந்தப்போ அந்தக் குழந்தை நல்ல ஆரோக்கியமாவும், நல்ல கண் பார்வையோடையும்தான் இருந்துச்சு. பிரெய்லியோட அப்பா தோல் பொருட்களைத் தயாரிக்கிற வேலையை செஞ்சிட்டு வந்தாரு. பிரெய்லிக்கு 3 வயசு இருக்கப்போ, அவங்க அப்பாவுடைய தோல் பொருட்களை செய்யற கருவிகள்ல ஒன்றை வச்சி விளையாடிட்டு இருந்துருக்காரு. அப்போ தெரியாம அந்த கருவி அவருடைய ஒரு கண்ல குத்தி, உடனடியா அதற்கு மருத்துவம் பண்ணாங்க. முதல்ல அது பெரிய காயமா தெரியல. ஆனா, அந்த சின்ன விபத்து கொஞ்சம் கொஞ்சமா அவருடைய கண்கள்ல பாதிப்ப உண்டாக்கத் தொடங்குச்சு. பிரெய்லிக்கு 5 வயசு ஆகும்போதே, அவருடைய பார்வை முழுமையா பறிபோயிருந்துச்சு.

பார்வைதான் போச்சு. ஆனால், பிரெய்லியோட தன்னம்பிக்கை அப்படியேதான் இருந்துச்சு. பார்வைத்திறன் சவாலோடவும் பாடசாலையில் சிறந்த மாணவராகத்தான் பிரெய்லி இருந்தாரு. ஆனால், சாதாரண மாணவர்கள் படிக்கிற பாடசாலையில் பார்வைத்திறன் சவால் உடையவர்களுக்குத் தேவையான சரியான கல்விமுறை இல்லைனு பிரெய்லிக்குத் தோனிக்கிட்டே இருந்திருக்கு. தனக்கு பத்து வயசு இருக்கப்போ, பாரிஸ்ல இருக்கிற Royal Institute for Blind Youth அப்படிங்கிற, பார்வைத்திறன் சவால் உடைய குழந்தைகளுக்குன்னே செயல்பட்ட சிறப்பு பாடசாலையில் சேர்ந்தாரு பிரெய்லி. அந்தப் பாடசாலையின் நிறுவனர் வெலண்டின் ஹவுவி (Valentin Hauy), பார்வைத்திறன் சவால் உடைய குழந்தைகள் படிக்கிறதுக்குனே வடிவமைக்கப்பட்ட புத்தகங்களை உருவாக்கி வச்சிருந்தாரு. பிரெய்லி அந்தப் பாடசாலையில் சேர்ந்த 1819ஆம் ஆண்டு காலகட்டத்துல மொத்தம் 14 புத்தகங்கள் அந்தப் பாடசாலையில் இருந்திருக்கு.

சாதாரணமா நாம் பயன்படுத்துற எழுத்துகளை பார்வைத்திறன் சவால் உடைய குழந்தைகள் படிக்கிற மாதிரி கொஞ்சம் மேடா அச்சடிச்சிருப்பாங்க. அந்த எழுத்தைத் தொட்டுப் பார்த்து அதோட வடிவத்த உணர்ந்து பார்வைத் திறன் சவால் உடையவங்க படிச்சிக்கலாம். ஆனால், இந்த முறையில் பார்வைத்திறன் சவால் கொண்டவங்க படிக்க ரொம்ப நேரம் ஆச்சு. மேலும், புத்தகமும் ரொம்பக் கனமா இருந்துச்சு. இதுவும்கூட பார்வைத்திறன் சவால் கொண்டவங்களுக்கான கற்றல் முறை இல்லைனு பிரெய்லி நினைச்சார்.

அப்போதான் பிரெய்லிக்கு பிரான்ஸ் நாட்டு இராணுவம் பயன்படுத்துற Night Writing முறை பற்றித் தெரியவந்துச்சு. இராணுவத்துல போர் முனையில இருக்குற சிப்பாய்க்கு வழக்கமான முறையில தகவல் அனுப்புனா, இரவு நேரங்கள்ல அதைப் படிக்க நெருப்பைப் பயன்படுத்த வேண்டியிருக்கும். அது எதிரிப் படைக்கு எளிதா இலக்காக்கிடும். இதைத் தவிர்க்கத்தான் இந்த Night Writing அப்படிங்கிற முறைய சார்ல்ஸ் பார்பியர் என்கிற பிரான்ஸ் கேப்டன் உருவாக்கியிருந்தாரு. 12 புள்ளிகளை அடிப்படையா வச்சு உருவாக்கப்பட்ட இந்த முறையில, காகிதத்துல புள்ளிகள் மேலெழுந்து மேடு மாதிரி ஓர் அமைப்பை கொண்டிருக்கும். குறிப்பிட்ட வரிசையில புள்ளிகள் இருந்தா அது ஒரு எழுத்தையோ எண்ணையோ குறிக்கும். அதே மாதிரி எல்லா எழுத்து மற்றும் எண்ணுக்கும் புள்ளிகளை வச்சு குறியீடு உருவாக்கியிருப்பாங்க. இதை விரலால தொட்டுப் பார்த்து, என்ன தகவல் சொல்லியிருக்காங்கனு இரவு நேரத்துல் விளக்கு வெளிச்சம் இல்லாமையே போர் முனையில இருக்க ஒரு சிப்பாயால தெரிஞ்சுக்க முடிஞ்சது.






பார்வைத்திறன் சவால் உடையவர்களுக்கான பாடசாலையில் சேர்ந்த இரண்டே வருஷத்துல பிரெய்லி, இந்த முறையை முழுசா கத்துக்கிட்டாரு. ஆனா, இந்த முறையிலையும் படிக்க நிறைய நேரம் எடுத்துக்கிறதா நினைச்ச பிரெய்லி, இதே முறையை கொஞ்சம் மாத்தி பார்வைத்திறன் சவால் உடையவர்கள் படிக்கிற மாதிரி எளிமையான வடிவமா கொண்டு வர்ற முயற்சில இறங்கினாரு. 12 புள்ளிகள் கொண்ட Night Writing முறை மாதிரி இல்லாம, 6 புள்ளிகள் மட்டும் வச்சு 63 விதமான சேர்க்கையில எழுத்துகள் மற்றும் எண்களை உருவாக்கினார். இந்த முயற்சிகளை அவர் மேற்கொண்டது 1824ஆம் ஆண்டு. 1829இல் தன்னோட இந்தப் புதிய முறையை உலகத்துக்கு அறிமுகப்படுத்தினாரு பிரெய்லி.

இதற்கிடைப்பட்ட காலத்துல அவர் படிச்ச பாடசாலையிலேயே வரலாறும், கணக்குல அல்ஜீப்ரா மற்றும் ஜியோமெட்ரி வகுப்புகளும் எடுக்கத் தொடங்கிட்டாரு பிரெய்லி. பிரெய்லிக்கு படிப்பு மட்டுமில்லாம இசையிலையும் பேரார்வம் இருந்துச்சு. சின்ன வயசுலையே செல்லோ மற்றும் ஓர்கன் அப்படிங்கிற ரெண்டு இசைக்கருவிகளை நல்லா வாசிக்கக் கத்துக்கிட்டாரு. 1834இல இருந்து 1839வரை பல சர்ச்சுகள்ல இந்த இசைக் கருவிகளை அவர் வாசிச்சிருக்காரு. இசை மேல் ஆர்வம் இருந்ததால அவர் உருவாக்குன பிரெய்லி முறையை இசைக்கும், கணக்குப் பாடங்களுக்கும் உருவாக்குனாரு.

### பிரெய்லி முறை

இவ்வளவு கஷ்டப்பட்டு பார்வைத்திறன் சவால் உடையவர்களுக்கான ஒரு கற்றல் முறையை பிரெய்லி உருவாக்குனாலும், தொடக்கத்துல அது சரியான வரவேற்பைப் பெறல. அவர் படிச்ச Royal Institute for Blind Youth பாடசாலையிலேயே அவர் உருவாக்குன முறைக்கு சரியான வரவேற்பு கிடைக்கல. 1854இல் தான் அந்தப் பாடசாலையிலேயே பிரெய்லி முறையை அறிமுகப்படுத்தியிருக்காங்க. ஆனால், அதற்கிடையில 1852இல் பிரெய்லி இறந்துட்டாரு. பிரெய்லிக்கு சின்ன வயசுல இருந்தே சுவாசக் கோளாறு இருந்திருக்கு. கிட்டத்தட்ட 16 வருடங்கள் அந்த நோயினால அவதிப்பட்டிருக்காரு பிரெய்லி. 1852இல் அது ரொம்ப தீவிரமடைஞ்சு ரோயல் இன்ஸ்ட்டிட்யூட் மருத்துவமனையில் காலமாகிட்டாரு பிரெய்லி.

அவர் இறந்த பிறகுதான் பிரெய்லி முறை கொஞ்சம் கொஞ்சமா மக்களுக்குத் தெரியவந்துச்சு. 19ஆம் நூற்றாண்டுல பிரெய்லி முறைய உலகமெங்கும் பயன்படுத்த ஆரம்பிச்சாங்க. வெறும் புத்தகத்தோட மட்டும் நிக்காம, பிரெய்லி டைப்ரைட்டர், பிரெய்லி கீபோர்டுன்னு பார்வைத்திறன் சவால் உடையவங்க தினசரி வாழ்க்கையில் பயன்படுத்துறதுக்கு பிரெய்லி முறை மிகவும் வசதியாவும் எளிமையாவும் இருக்கு. இரண்டு நூற்றாண்டுகள் கடந்து இன்னைக்கும் காலண்டர், ஏ.டி.எம், புத்தகம்னு சாதாரண மக்கள் பயன்படுத்துற அதே வசதிகளை யாரோட உதவியும் இல்லாம பார்வைத்திறன் சவால் உடையவர்களும் பயன்படுத்த முடியுதுன்னா அதுக்கு பிரெய்லி கண்டறிஞ்ச அந்தக் கற்றல் முறை முக்கியக் காரணம்.

பிரெய்லியோட சாதனைய போற்றும் விதமா 1952இல பிரெய்லி பிறந்த ஊர்ல புதைக்கப்பட்டிருந்த அவரோட உடலை எடுத்து வந்து பிரான்ஸ்ல இருக்கிற பேன்தியன்ல (Pantheon) முழு அரசு மரியாதையோட மறுபடியும் அடக்கம் பண்ணுச்சு பிரான்ஸ் அரசு. பிரான்ஸுல மிகவும் மரியாதைக்குரியவர்களை இங்கதான் அடக்கம் செய்வாங்களாம். பிரெய்லியோட பங்களிப்பைக் கொண்டாடும் விதமாகவும், பிரெய்லியோட கற்றல் முறையைப் பத்தின விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அவர் பிறந்த தினமான ஜனவரி 4ஆம் திகதி உலக பிரெய்லி தினமா கொண்டாடப்படுது!

(நன்றி - விகடன்)

## இன்றைய நாளில்...

* 1889 – சப்ரகமுவ என்ற புதிய மாகாணம் சேர் ஈ.என்.வோக்கர் என்பவரால் உருவாக்கப்பட்டது.
* 1912 – பிரித்தானியக் குடியேற்ற நாடுகளில் சாரணர் இயக்கம் நிறுவனமயப்படுத்தப்பட்டது.
* 1958 – முதலாவது செயற்கைக்கோள் ஸ்புட்னிக்-1 தனது சுழற்சிப் பாதையைவிட்டு விலகி பூமியில் வீழ்ந்தது.
* 1959 – சோவியத்தின் லூனா-1 சந்திரனுக்கு மிக அண்மையில் சென்ற விண்கலம் ஆனது.
* 2010 – உலகின் அதியுயர் கட்டடமான புர்ஜ் கலீஃபா டுபாயில் அதிகாரபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

## நக்கல் நமசிவாயம்

உண்மைய சொல்லப்போனா நாடு இப்ப இருக்கிற நிலையில எலெக்சன் வந்தா மக்களுக்கு கொஞ்சம் நிவாரணப்பொருட்களாவது கிடைக்கும்.. அரசாங்கத்துக்கும் கொஞ்சம் ஆறுதலா இருக்கும்..!






# 2023.01.02 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

**01.அரச தொழில் முயற்சியாண்மை நிறுவனங்களை (SoE's) மீள்கட்டமைக்கும் வேலைத்திட்டம்**

2022ஆம் ஆண்டுக்கான இடைக்கால மற்றும் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தை சமர்ப்பிக்கும் போது அரச தொழில் முயற்சியாண்மை நிறுவனங்களை மீள்கட்டமைப்பதற்கான யோசனை ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கமைய, தற்போது அரச தொழில் முயற்சியாண்மைகளின் மீள்கட்டமைப்புக்கான செயன்முறைக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் அரச தொழில் முயற்சிகள் மீள்கட்டமைப்பு அலகொன்று நிறுவப்பட்டுள்ளது.

மீள்கட்டமைப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் நிறுவனங்களில் ஒருசில அரச நிறுவனங்களாவதுடன், அவ்வாறான ஒருசில கம்பனிகளில் பெரும்பான்மைப் பங்குகள் அரசக்குச் சொந்தமாகவுள்ளது. அத்துடன், ஒருசில அரச தொழில் முயற்சிகள் கூட்டுத்தாபனங்களாக இயங்குகின்றன. குறித்த இந்நிலைமையின் கீழ் அரச தொழில் முயற்சிகளை மீள்கட்டமைக்கும் வேலைத்திட்டத்தைத் துரிதப்படுத்துவதற்கு இயலுமாகும் வகையில் 100% வீதமான பங்குகளின் உரித்து திறைசேரியின் செயலாளருக்கு கிடைக்கும் வகையில் திறைசேரியில் இணைப்புச் செய்யப்பட்ட தாய்க் கம்பனியை நிறுவுவதற்கும், மீள்கட்டமைப் பதற்காக அடையாளம் காணப்படுகின்ற அரச தொழில் முயற்சியாண்மைகளை குறித்த தாய்க் கம்பனியுடன் இணைப்புச் செய்யப்பட்ட கம்பனியாக பதிவுசெய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை தயாரிப்பதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. நகரும் சாதனங்கள் தொடர்பான சர்வதேச உரிமைகள் பற்றிய கேப்டவுன் சமவாயம் மற்றும் வானூர்தி உபகரணங் களுக்கான விசேட விடயங்கள் தொடர்பான சர் வதேச உரிமைகள் தொடர்பான சமவாயத்தை ஏற்றுக்கொள்ளல்**

பிரத்தியேக சட்டங்களை ஒருங்கிணைக்கும் சர்வதேச நிறுவனம் மற்றும் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து நிறுவனத்தின் அனுசரணையுடன் 2001ஆம் ஆண்டு, நகரும் சாதனங்கள் தொடர்பான சர்வதேச உரிமைகள் பற்றிய கேப்டவுன் சமவாயம் மற்றும் வானூர்தி உபகரணங்களுக்கான விசேட விடயங்கள் தொடர்பான நகரும் சாதனங்கள் தொடர்பான சர்வதேச உரிமைகள் பற்றிய உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது.

குறித்த சமவாயத்தை ஏற்றுக் கொள்வதற்கும், அதற்குரிய ஏற்பாடுகளை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சட்டங்களை வகுப்பதற்கும் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. இலங்கையிலிருந்து சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ள சமுத்திர மீன்பிடி நீரியல் வள உற்பத்திகளை பரிசோதித்தல், தொற்றுக்காப்பு செய்தல் மற்றும் கால்நடைகள் சுகாதாரப் பாதுகாப்புத் தேவைகள் தொடர்பான அறிவியல் சோதனை பணிமுறை முன்னேற்பாடு**

எமது நாட்டிலிருந்து 33 வகையான உணவுற்பத்திகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதற்காக சீனக் குடியரசின் பொதுச் சுங்க நிர்வாகத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் 29 உற்பத்திகள் நீரியல் வள உற்பத்திகளாக காணப்படுவதுடன், சீனக் குடியரசில் பதிவுசெய்யப்பட்ட இலங்கைக் கம்பனிகளில் 38 கம்பனிகள் குறித்த ஏற்றுமதிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சீனாவுக்கு நீரியல் வள உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவதற்கும் ஊக்குவிப்பதற்கும் இயலுமாகும் வகையில் இலங்கையிலிருந்து சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் சமுத்திர மீன்பிடி நீரியல் வள உற்பத்திகளைப் பரிசோதித்தல், தொற்றுக்காப்பு செய்தல் மற்றும் கால்நடைகள் சுகாதாரப் பாதுகாப்பு தேவைகள் தொடர்பான அறிவியல் சோதனைப் பணிமுறை முன்னேற்பாடு, சீனக் குடியரசின் பொது சுங்க நிர்வாகம் மற்றும் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் கடற்றொழில் அமைச்சுக்கும் இடையில் கையொப்பமிடுவதற்காக கடற்றொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. பாடசாலைகளில் 2ஆம் தரம் தொடக்கம் 11ஆம் தரம் வரைக்கும் மாணவர்களை உள்ளீர்த்துக் கொள்வதற்கான புதிய பொறிமுறையை அறிமுகப்படுத்தல் (6ஆம் தரம் தவிர்ந்த)**

பாடசாலைகளில் 2ஆம் தரம் தொடக்கம் 11ஆம் தரம் வரை மாணவர்களை உள்ளீர்த்துக் கொள்வதற்கான புதிய பொறிமுறையை அறிமுகப்படுத்தல் (6 ஆம் தரம் தவிர்ந்த) தற்போது நடைமுறையிலுள்ள சுற்றறிக்கை ஏற்பாடுகளை மேலும் ஒழுங்குமுறைப்படுத்தி இடைத்தரங்களில் பாடசாலையை மாற்றுவதற்கு உண்மையான தேவையுடையவர்களை அடையாளம் கண்டு, அனைத்து மாணவர்களுக்கும் நியாயமானதும் சமமானதுமான வாய்ப்புகள் கிடைக்கும் வகையில் புதிய பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்தவும், தற்போது காணப்படுகின்ற 1 முதல் 5ஆம் தரம் வரைக்கும் ஒரு வகுப்பில் உயர்ந்தபட்ச மாணவர்களின் எண்ணிக்கை 40 உம், மற்றும் 6 முதல் 11ஆம் தரம் வரைக்கும் ஒரு வகுப்பிற்கு உயர்ந்தபட்ச மாணவர்களின் எண்ணிக்கை 45 ஆகவும் குறித்த பொறிமுறையை மாற்றியமைக்காமல் மேற்கொண்டு செல்வதற்கும் கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் துரிதசேவை அலகொன்றை நிறுவுதல்**

நகர அபிவிருத்தி அதிகாரசபையால் நகர்ப்புறப் பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு அனுமதி வழங்கும் செயன்முறையைத் துரிதப்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, தற்போது நடைமுறையிலுள்ள அபிவிருத்தி விண்ணப்பங்களைத் தயார்படுத்தும் செயன்முறையை மேம்படுத்தி ஒரே இடத்தில் (one-stop unit) அனைத்து அனுமதிகளையும் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அலகொன்றை நிறுவுவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. பொரளை ஓவல் வியூ ரெசிடன்சீஸ் வீடமைப்புத் திட்டத்தின் வீட்டு அலகுகளை அறுதி உறுதி உரிமைத்தத்துவதார அடிப்படை யில் விற்பனை செய்தல்**

அரச ஊழியர்களுக்காக நிர்மாணிக்கப் பட்டுள்ள 608 வீட்டு அலகுகள் மற்றும் 05 வர்த்தக அலகுகளுடன் கூடிய 24 அடுக்குமாடிகளைக் கொண்ட பெலன்கஸ் துடுவ, பொரளை ஓவல் வியூ ரெசிடன்சீஸ் வீடமைப்புத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு 2020ஆம் ஆண்டு வதிவிடதார உரித்து வதிவிடக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 1978 ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வதிவிடக்காரர்களுக்கு அறுதி உறுதி உரிமைத்தத்துவத்தை வழங்குவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07.ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் உலகளாவிய காலவாரி யான மீள்நோக்கு 4ஆவது காலவரிசை (UNHRC - Universal Periodic Review 4th Cycle)**

2006ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையால் நிறைவேற்றப்பட்ட யோசனைக்கமைய அனைத்து உறுப்பு நாடுகளும் உலகளாவிய காலவாரியான மீள்நோக்குகளுக்கு உட்பட்டு செயற்படல் வேண்டும். அதனால், உறுப்பு நாடுகளில் மனித உரிமை நிலைமைகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் குறித்த நாடுகளில் மனித உரிமைகளுக்கான பொறுப்புகளை நிறை வேற்றுவதற்கும் தேசிய மட்டத்தில் மேற்கொள் ளப்பட்டுள்ள படிமுறைகளை வெளிப்படுத் துவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

அனைத்து உறுப்பு நாடுகளின் அரசுகள் தமது மீள்நோக்குகளை 4 ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இலங்கை இதுவரை 3 காலவரிசை மீள்நோக்கு அமர்வுகளில் பங்குபற்றியுள்ளதுடன், அடுத்துவரும் மீள்நோக்கு காலவரிசை அமர்வு 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. 4ஆவது காலவரிசை அமர்வில் சமர்ப்பிக்கப் படவுள்ள, இலங்கையின் தேசிய அறிக்கைகள் மூலம் இதற்கு முன்னர் மேற்கொள்ளப் பட்ட மீள்நோக்குகளிலிருந்து இதுவரைக் கும் மேற்கொள்ளப்பட்டுள்ள படிமுறைகள் தொடர்பான சுயமதிப்பீட்டை சமர்ப்பிப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. 1979ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத் தைத் திருத்தம் செய்தல்**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபைக்கு அங்கத்தவர்களை நியமித்தல் தொடர்பான ஏற்பாடுகள் 1979ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் 5(1)ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும், குறித்த ஏற்பாட்டுக்கமைய துறைமுக விடயதானத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் பிரதிநிதியொருவரை பணிப்பாளர் சபைக்கு நியமிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் வகுக்கப்படவில்லை. குறித்த தீர்மானங்கள் எடுக்கும்போது விடயதான அமைச்சரின் பிரதிநிதித்துவம் இருப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதால், அதற்கமைய செயலாற்றுவதற்கு இயலுமாகும் வகையில் 1979ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் 5(1)ஆம் உறுப்புரையை திருத்தம் செய்வதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09.அரச காணிகளை கையுதிர்க்கும் அடிப்படைச் செயற்பாடுகளை பிரதேச செயலாளர் ஊடாக மாத்திரம் மேற்கொள்ளல்**

தற்போது மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழான காணிக் கையுதிர்த்தலுக்கான அதிகாரம் இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திற்கும் அத்தோடு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளைக் கையுதிர்ப்பதற்கான அதிகாரம் குறித்த ஆணைக்குழுவுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குரிய நோக்கங்கள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளமையால், குறித்த இரண்டு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த அரச காணிகளைக் கையுதிர்த்தல் தொடர்பான அனைத்து அடிப்படைச் செயற்பாடுகளும் பிரதேச செயலாளர்கள் ஊடாக மாத்திரம் மேற்கொள்வதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியுள்ளது.

அதற்கமைய, அரச காணிகளைக் கையுதிர்த்தல் தொடர்பாக தற்போது காணப்படுகின்ற அனைத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை ஆராய்ந்து, அறிமுகப்படுத்த வேண்டிய புதிய சட்ட ரீதியான திருத்தங்கள் உள்ளடங்கலாக, அரச காணிகளை கையுதிர்த்தல் தொடர்பான கொள்கையை வகுப்பதற்கும், தேவையான வழிகாட்டல்களைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கும் ஜனாதிபதி சிரேஷ்ட மேலதிக செயலாளர் தலைமையிலான குழுவொன்றை நியமிப்பதற்கு ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சரவை உடன்பாடு வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

**10. 1969ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளை நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

1969ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளை நாடாளுமன்ற அங்கீகாரத் திற்காக சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடுகள் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோச னைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி யுள்ளது.

2309/40ஆம் இலக்க 2022.12.09ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் விதிக்கப்பட்டுள்ள 2022ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்.

2311/08ஆம் இலக்க 2022.12.19ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் விதிக்கப்பட்டுள்ள 2022ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்.

2311/18ஆம் இலக்க 2022.12.21ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் விதிக்கப்பட்டுள்ள 2022ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க செலுத்தல் முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள்.

**11.உள்ளூர் சந்தையில் நிலவுகின்ற முட்டைத் தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக முட்டை இறக்குமதி செய்தல்**

தற்போது உள்ளூர் சந்தையில் நிலவுகின்ற முட்டைத் தட்டுப்பாடு மற்றும் முட்டை விலையேற்றங்கள் காரணமாக நுகர்வோர் எதிர்கொண்டுள்ள சிரமங்களுக்குத் தீர்வுகாணும் வகையில், தேவையேற்படின் அரசாங்கத்தின் தலையீட்டில் முட்டை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

**(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசாரப் பிரிவினால் சிங்கள மொழியிலான அமைச்சரவைத் தீர்மான ஆவணம், தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)**

# அதிபர் மாற்றத்திற்கு எதிர்ப்பு; வரணியில் பெற்றோர் போராட்டம்!

யாழ் - வரணி கரம்பைக்குறிச்சு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் மாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது,

பெற்றோர்களினால் பாடசாலை நுழைவாயிலை மறித்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை பாடசாலைக்கு மாணவர்கள் எவரும் சமுகமளிக்காத நிலையில், ஆசிரியர்கள் மாத்திரம் பாடசாலைக்கு சமுகமளித்திருந்தனர்.

பாடசாலை அதிபர் மாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்களை பாடசாலைக்கு அனுப்பவில்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுட்ட பெற்றோர் தெரிவித்தனர்.

குறித்த பாடசாலை அதிபர் ஏழு வருட நியமனத்தில் பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட நிலையில், மூன்று வருடங்களில் திடீரென அதிபரை இடமாற்றுவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வர்கள் தெரிவித்தனர்.

திடீர் இடமாற்றத்திற்கான காரணத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரி விக்க வேண்டுமென நேற்றைய தினம் பெற்றோர்கள் கவனயீர்ப்பில் ஈடுபட்ட நிலை யில், நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதிபர் இடமாற்றத்தை நிறுத்துமாறு கோரி பெற்றோர்களினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித் தனர்.

எவ்வாறாயினும் உரிய பதில் கிடைக்கும் வரை தொடர் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக பெற்றோர்கள் குறிப்பிட்டனர்.







ஸ்ரீ லங்கா மஹ பெங்குவ
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 03.01.2023 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 132 8000 | 144 0084 |
| கனேடியன் டொலர் | 152 7527 | 164 6211 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40 2338 | 43 4030 |
| யூரோ | 271 7158 | 287 3024 |
| ஜப்பான் யென் | 1 65 2 | 1 7612 |
| சிங்கப்பூர் டொலர் | 156 7305 | 168 838 |
| ஸ்ரேலிங் பவுன் | 322 4353 | 34 14 2 |
| சுவிஸ் பிரான்ங் | 276 1172 | 3 4 5561 |
| ஐ.அ.டொலர் | 25 1110 | 260 4810 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 852 815 |
| குவைட் | குவைட் தினார் | 0075 8 44 |
| ஓமான் | ஓமான் றியால் | 832 828 |
| கட்டார் | கட்டார் றியால் | 88 2622 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 4864 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 7562 |

ஜாதிக லொத்தரை மண்டலய
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.01.02
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 4988
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,192,949.00
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 0 2 6 9 9 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3230
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 67,577,169.60
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 59 66 76 80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1443
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,962,581.60
வெற்றி இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 5 1 5 0 9 0

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1018
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 140,503,267.60
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 06 08 19 34

ராசி சுப பலன்
Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 297
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,549,521.00
வெற்றி இலக்கினம் மகரம்
வெற்றி இலக்கங்கள் 13 14 57 58
விசேட இலக்கினம் மகரம்

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1336
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 290,449,302.00
ஆங்கில எழுத்து H
சுப்பர் இலக்கம் 20
வெற்றி இலக்கங்கள் 54 63 77 78
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# அதிபரின் மாற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு





(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் வரணி கரம்பைக்குறிச்சி அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபரின் மாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று(3) செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மாணவர்களின் பெற்றோர்கள் பாடசாலை நுழைவாயிலை மறித்து குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதேவேளை, பாடசாலைக்கு மாணவர்கள் எவரும் சமுகமளிக்காத நிலையில் ஆசிரியர்கள் மாத்திரம் பாடசாலைக்கு சமுகமளித்திருந்தனர்.

பாடசாலை அதிபர் மாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்களை பாடசாலைக்கு அனுப்பவில்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர் தெரிவித்தனர்.

# வருமான வரிச்சட்டங்களை சாதாரணமாக நடைமுறைப்படுத்த வேண்டும்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்




(யாழ். நிருபர்)

அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தன்னிச்சையான வருமான வரிக்கொள்கையை நீக்கி வருமான வரிச் சட்டங்களை சாதாரண முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் தொழிற்சங்கப் போராட்டம் தொடங்கும் - என யாழ். மாவட்ட அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (03) யாழ். மாவட்ட அரச வைத்தியர் அதிகாரிகள் சங்கம் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் ஊடக சந்திப்பை நடத்தியபோதே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தினர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வரிக்கொள்கையின் மூலம் வருடமொன்றுக்கு இரண்டு மாதத்திற்கு மேற்பட்ட வேதனத்தை செலுத்த வேண்டிய கட்டாயத்தில் வைத்தியர்கள் இருக்கின்றனர். இது வைத்திய துறையை மட்டுமல்ல, ஏனைய தொழிற்றுறையையும் பாதித்துள்ளது.

எவரையும் பாதிக்காத வகையில் வருமான வரிக்கொள்கை நாடாளுமன்றில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

2022இல் வரிக்கொள்கையின் காரணமாக 500 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியிருக்கின்றனர். இதனால் மனிதவலு பற்றாக்குறை வைத்தியதுறையில் மட்டுமல்ல, ஏனைய துறைகளிலும் ஏற்படுத்தும். இதனால் மக்கள்தான் பாதிக்கப்படுகின்றனர்.

ஜனாதிபதிக்கும் நாடாளுமன்ற கட்சித் தலைவர்களுக்கும் வாய்மூலமாகவும் எழுத்து மூலமாகவும் வரிக்கொள்கை தொடர்பாக தெரியப்படுத்தியிருந்தோம். வரிக்கொள்கை தொடர்பான இறுதி வாசிப்பின்போது நாடாளுமன்ற முன் எதிர்ப்பை தெரிவித்திருந்தோம். அதனை செவிமடுக்காமல் வரிக்கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

எதிர்வரும் காலங்களில் வருமான வரிக்கொள்கையை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதை ஆராயவுள்ளோம். எம்முடைய கோரிக்கையை ஏற்று வருமான வரிச்சட்டங்களை சாதாரண முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும். தவறும்பட்சத்தில் தொழிற்சங்கப் போராட்டம் தொடரும் - என்றனர்.

மேலும் சம்பளம் வழங்கப்படும் திகதிகளை கறுப்பு தினமாகவும் பிரகடனப்படுத்த தீர்மானித்துள்ளோம் - என்றனர்.

# இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைத்த சிறை

(யாழ். நிருபர்)

இலங்கை கடற்பகுதியில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 12 பேருக்கும் பருத்தித்துறை நீதவான் நீதிமன்று மூன்று வருட சாதாரண சிறைத்தண்டனை விதித்து அதனை பத்து வருடங்களுக்கு ஒத்திவைத்துள்ளது.

கடந்த டிசம்பர் 21ஆம் திகதி பருத்தித்துறை அருகே இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் ஒரு படகை கைப்பற்றியதுடன், அதிலிருந்த பன்னிரெண்டு மீனவர்களையும் கைதுசெய்தனர்.

12 இந்திய மீனவர்களும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 12 பேருக்கும் மூன்று வருட சாதாரண சிறைத்தண்டனை விதித்து அதனை பத்து வருடங்களுக்கு ஒத்திவைத்ததுடன், படகு மற்றும் கைப்பற்றப்பட்ட சான்றுப் பொருட்களை அரசுடமையாக்க பருத்தித்துறை நீதவான் பொன்னுத்துரை கிரிசாந்தன் உத்தரவிட்டார்.

# வவுனியாவில் 9,486 விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு உதவித்தொகை வைப்பு

(வவுனியா நிருபர்)

ஒரு ஹெக்ரேயருக்கு உட்பட்ட நிலத்தில் விவசாயம் செய்யும் 9,486 விவசாயிகளுக்கு உதவித்தொகை வங்கிகளில் வைப்பு செய்யப்பட்டு வருவதாக கமநல அபிவிருத்தித் திணைக்கள வவுனியா மாவட்ட உதவி ஆணையாளர் நே.விஸ்ணுதாசன் தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவித்தொகை தொடர்பில் நேற்று (03) கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் 2022/23 பெரும்போகத்தில் 21,864 விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். 23 ஆயிரத்து 369 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் முதல் கட்டமாக விவசாயிகளுக்கான உதவித் தொகையாக ஒரு ஹெக்ரேயருக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவிருக்கின்றது. இதன்படி 9,486 விவசாயிகளுக்கு இந்த உதவித் தொகை நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் வங்கியில் வைப்பு செய்யப்படுகிறது.

அடுத்தகட்டமாக ஒரு ஹெக்ரேயருக்கு மேல் விவசாயம் செய்த விவசாயிக்கு உதவித்தொகை இரண்டு வாரங்களுக்குள் முழுமையாக வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

# வட்டுக்கோட்டை கடலில் மிதந்துவந்த நிலையில் மீனவர் ஒருவரின் சடலம் மீட்பு



(யாழ். நிருபர்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட திருவடிநிலை கடலில் மிதந்து வந்த நிலையில் மீனவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த மீனவர் நேற்று முன் தினம் கடற்றொழிலுக்கு சென்றிருந்தார். அவர் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தநிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உறவினர்கள் சடலத்தை வீட்டுக்கு எடுத்துச்செல்ல முற்பட்டவேளை கடற்படையினருக்கும் உறவினர்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது. அதனையடுத்து அவர்கள் சடலத்தினை வீட்டிற்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

சுழிபுரம், காட்டுப்புலம் பகுதியைச் சேர்ந்த கணபதி தவம் (வயது 58) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பிறந்து ஓரிரு நாட்களேயான குழந்தை சடலமாக மீட்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு வத்திராயனில் பச்சிளம் குழந்தையொன்று வீதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளது. மருதங்கேணி பொலிஸாருக்கு நேற்று முன்தினம் (02) மாலை கிடைத்த தகவலையடுத்து பச்சிளம் குழந்தை சடலமாக மீட்கப்பட்டதுடன், சம்பவம் தொடர்பில் 34 வயதான பெண்ணொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். இது தொடர்பாக தெரியவருவதாவது,

பிறந்து ஓரிரு நாட்களான பெண் குழந்தை ஒன்றின் சடலத்தை நாய்கள் உண்டபோது கண்ட ஊரவர்கள் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இது தொடர்பாக விசாரணைகளை முடுக்கிவிட்ட பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் அப்பகுதியிலுள்ள வீடொன்றில் தங்கியிருந்த பெண்ணை கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட பெண்ணிடம் மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# வீதியை புனரமைக்காமல் அரசியல்வாதிகள் வரக்கூடாது

## ஹட்டன் - வெளிஓயா தோட்ட மக்கள் எச்சரிக்கை







(எஸ்.கணேசன்)

விரைவில் தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே, எமக்கான வீதியை புனரமைத்துதராமல், அரசியல்வாதிகள் எமது பகுதிக்குள் நுழையக் கூடாது என்று ஹட்டன் - வெளிஓயா 22ஆம் தோட்டப் பகுதி மக்கள் எச்சரித்துள்ளனர்.

ஹட்டன் - வெளிஓயா 22ஆம் இலக்க தோட்டத்தில் உள்ள 4 வயது சிறுவன் ஒருவர் நேற்று முன்தினம் (02) உயிரிழந்துள்ளார். சுகவீனமுற்றிருந்த குறித்த சிறுவனை, உரிய நேரத்துக்கு வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு வாகனம் இருக்கவில்லை. வீதி குண்டும் குழியுமாக காணப்படுவதால் வெளியில் இருந்துகூட வாகனத்தை பெற முடியாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையிலேயே இதற்கு மேலும் மக்கள் உயிரிழக்க இடமளிக்க முடியாது எனவும், வீதியை உடன் புனரமைத்து தருமாறு வலியுறுத்தி யும் தோட்ட மக்கள் நேற்று (03) போராட்டத்தில் ஈடுபட்டனர். சிறுவர்களும் இப்போராட்டத்தில் பங்கேற்றனர்.

சுமார் 2 கிலோமீற்றர் வரையான வீதி மிகவும் மோசமாகக் காணப்படுவதால் மழைக் காலங்களில் பாடசாலை மாணவர்கள், ஆபத்தான நிலையில் பயணிப்பதாகவும், இது தொடர்பில் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

சிறுவனின் மரணத்துக்கு இந்த வீதியும் ஒரு காரணம். இனியும் மக்களை பலிகொடுக்க நாம் தயாரில்லை. எமக்கான வீதி புனரமைக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அரசியல்வாதிகளை எமது ஊருக்குள் விடமாட்டோம் எனவும் தோட்ட மக்கள் உறுதியாகக் குறிப்பிட்டனர்.

# 2023ஆம் வருடத்துக்கான கடமைகள் கண்டி மாவட்ட செயலகத்தில் ஆரம்பம்



(கண்டி நிருபர்)

2023ஆம் ஆண்டுக்கான அரச பணிகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (2) திங்கட்கிழமை கண்டி மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் தொடக்கத்தில் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் தேசியக்கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதமும் இசைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அரச ஊழியர்களுக்கான சத்தியப்பிரமாணமும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன், அரச உத்தியோகத்தர்களின் பிரதான இலக்கு பொதுமக்களுக்கு உதவி செய்வதாக இருக்க வேண்டும் என்று தெரிவித்தார். அத்துடன் அரச வருமானத்தில் பெருமளவிலான பகுதி பொதுத்துறை ஊழியர்களின் சம்பளத்திற்காகவே செலவிடப்படுவதால் நாம் இயன்றவரை சிறப்பான சேவையை பொதுமக்களுக்கு வழங்கத் தயாராக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கண்டி மாவட்ட செயலக ஊழியர்கள் அனைவரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியரை வெளியேறுமாறு பெற்றோர் ஆர்ப்பாட்டம்



ஹட்டன் கல்வி வலயம் கோட்டம் மூன்றுக்குட்பட்ட சாமிமலை தெய்வகந்த தமிழ் வித்தியாலயத்தைக் கைப்பற்றி வைத்திருந்த ஆசிரியரை வெளியேறுமாறு கோரி பெற்றோர்கள் நேற்று முன்தினம் (02) திங்கட்கிழமை காலை பாடசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

மேற்கண்ட பாடசாலை ஆசிரியருக்கு ஹட்டன் வலயக்கல்வி பணிமனையின் ஊடாக இடமாற்றம் வழங்கப்பட்டிருந்த நிலையில், குறித்த பாடசாலைக்கு அதிபர் தகுதியுள்ள புதிய அதிபர் ஒருவரை பொறுப்பேற்குமாறு ஹட்டன் வலய கல்விப் பணிப்பாளரினால் எழுத்து மூலமாக கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

நேற்றுக் காலை குறித்த பாடசாலைக்கு புதிய அதிபர் சென்றிருந்தபோது, இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியரினால் புதிய அதிபருக்கு இடையூறு விளைவிக்கப்பட்ட நிலையில் அதிபர் தரம் இல்லாத ஆசிரியரை பாடசாலையை விட்டு வெளியேறுமாறும் புதிய அதிபரை பொறுப்பேற்குமாறும் வலியுறுத்தி பெற்றோர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். புதிய அதிபரை தனது கடமைகளை பொறுப்பேற்க விடாத குறித்த ஆசிரியர், பாடசாலையை விட்டு வெளியேற முயற்சித்தபோது பெற்றோர்கள் குறித்த ஆசிரியரை சுற்றி வளைத்தனர். இச்சம்பவம் தொடர்பில் அறிந்த கோட்டக்கல்விப் பணிப்பாளர் சிவகுமார் பெற்றோர்களோடு கலந்துரையாடிய பின்னர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் முன்னிலையில் புதிய அதிபர் கடமைகளை பொறுப்பேற்றமை குறிப்பிடத்தக்கது.

# சிவனொளிபாதமலை யாத்திரை வீதிகளின் சுற்றாடல் பாதிப்பு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

சிவனொளிபாத மலை யாத்திரிகர்களின் பிரதான யாத்திரை மார்க்கமாகக் காணப்படும் இரத்தினபுரி, பலாங்கொடை மற்றும் குருவிட்ட ஊடான பாதைகளின் இரு பகுதிகள் உட்பட சுற்றுப் பிரதேசங்களின் சுற்றாடல் பரந்தளவில் பாதிக்கப்பட்டு வருவதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் உட்பட இப்பகுதி பொதுமக்கள் முறையிட்டுள்ளனர்.

யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்களுக்கு யாத்திரை ஏற்பாட்டுக் குழுவினர், ஊடகங்கள் மற்றும் ஏனைய வழிமுறைகள் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கி வருகின்றபோதிலும் இவ்விடயத்தில் சில யாத்திரிகர்கள் அலட்சியமாக நடந்து கொள்வதாலேயே இவ்வீதிகளின் சுற்றாடல் இவ்வாறு பாதிக்கப்படுவதாகவும் இதனால் புனித நோக்கத்துடன் யாத்திரைகளை மேற்கொள்ளும் பக்தர்களுக்கு பெரும் தடங்கல் ஏற்பட்டு வருவதாகவும் பாதிக்கப்படுவோர் சார்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் முறையிட்டுள்ளனர்.

விசேடமாக இவ்வீதிகளின் இரு ஓரங்களிலும் சில இடங்களில் வீசப்பட்டுள்ள பிளாஸ்டிக் பொலித்தீன் வகைகளும் ஏனைய சில கழிவுப்பொருட்களும் அழுகிச் சிதைவடைந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவற்றை அகற்றும் வகையில் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதில் ஏற்பாட்டுக் குழுவினர் மாத்திரமன்றி ஊழியர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இப்பகுதியின் பிரதான யாத்திரைக்குரிய 3 வீதிகளிலும் பயணிக்கும் யாத்திரிகர்கள் தடைசெய்யப்பட்ட மற்றும் தேவையற்ற பொருட்களைப் பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்வதுடன் கழிவுப் பொருட்களை இப்பகுதியில் வீசி அசுத்தப்படுத்த வேண்டாமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.




நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் கட்டணம் செலுத்தும் தங்கும் விடுதி நேற்று முன்தினம் (2) திங்கட்கிழமை நண்பகல் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளரும் விசேட வைத்திய நிபுணருமான மகேந்திர செனவிரட்னவினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை விசேட வைத்திய நிபுணர் ரவி திசாநாயக்க மற்றும் வைத்தியர்கள், வைத்தியசாலை அதிகாரிகள், வைத்தியசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (திவாகரன்)

# இரத்தினபுரி கொடக்கவெல வீதியின் இரு புறங்களிலும் மாணிக்கக்கல் தோண்டப்படுவது சப்ரகமுவ மாகாண ஆளுநரால் தடுத்து நிறுத்தம்!

**(இரத்தினபுரி நிருபர்)**



இரத்தினபுரி கொடக்கவெல வீதியின் இரு புறங்களிலும் மாணிக்கக்கல் தோண்டப்பட்டு வருவதை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மாணிக்கக்கல் அதிகாரசபையின் தலைவர் விராஜ் சில்வாவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இரத்தினபுரி நகரின் மாற்றுவழியாக பயன்படுத்தப்படும் இரத்தினபுரி கொடக்கவெல விதியின் இரு புறங்களிலும் மாணிக்கக்கல் தோண்டப்பட்டு வருவதால் மேற்படி வீதிக்கு பாரிய சேதம் ஏற்பட்டு வருவது குறித்து நேற்றுமுன்தினம் (2) சப்ரகமுவ மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே மாகாண ஆளுநர் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

இரத்தினபுரியின் பிரதான மாற்றுவழியாக பயன் படுத்தப்படும் மேற்படி வீதி 11 கோடி ரூபா செலவில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் கடந்த 18 மாதங்களுக்கு முன்பு அபிவிருத்தி செய்யப்பட்டது.

இரத்தினபுரி மாநகர சபைக்கு சொந்தமான மேற்படி வீதி, இரத்தினபுரி நகரில் வெள்ளம் ஏற்படும்போது இவ்வீதியை மாற்று வீதியாக பயன்படுத்தப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இரத்தினபுரி கொடக்கவெல மாற்று வீதியின் இரு புறங்களிலும் பாரியளவில் பெகோ இயந்திரம் மூலம் மாணிக்கக்கல் தோண்டப்பட்டு வருவதால் மேற்படி வீதி பழுதடைந்து வருவது தற்போது மிகப் பெரிய பிரச்சினைக்கு உள்ளாகியுள்ளது.

மேற்படி வீதியின் இரு புறங்களிலும் மாணிக்கக்கல் அதிகாரசபையின் அனுமதிப்பத்திரத்துடன் பெகோ இயந்திரத்தின் மூலம் மாணிக்கக்கல் தோண்டப்பட்டு வருவதால் வீதி பழுதடைந்துள்ளது. மேற்படி பழுதடைந்த வீதியை மாணிக்கக்கல் தோண்டப்பட்டுவரும் உரிய அனுமதிப்பத்திரத்தின் பொறுப்பாளரால் சீரமைத்து தருவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக மாணிக்கக்கல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

மாணிக்கக்கல் அதிகாரசபையின் அனுமதிப்பத்திரத்துடன் பெகோ இயந்திரத்தின் மூலம் மாணிக்கக்கல் தோண்டப் பட்டு தற்போது பழுதடைந்துள்ள வீதியை தமது சொந்த நிதியின் மூலம் சீரமைத்து தருவதாக உரிய அனுமதிப் பத்திரத்தின் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்த இரத்தினபுரி பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி எஸ்.யு.மினிபுர,

மேற்படி விபரம் குறித்து இரத்தினபுரி வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம், புவியியல் மற்றும் மாணிக்கக்கல் அகழ்வுப் பிரிவின் மூலம் தமக்கு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி வீதியின் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ அதிகாரிகளுக்கு உத்தர விட்டார்.

இது குறித்து நடவடிக்கை எடுப்பதற்காக சப்ரகமுவ மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் ஆணையாளர், இரத்தினபுரி வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இரத்தினபுரி மாநகர சபை, தேசிய மாணிக்கக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை மற்றும் இரண்டு பொறியியலாளர்கள் உள்ளடக்கிய குழு ஒன்றும் நியமிக்கப்படவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் இரத்தினபுரி மாநகர சபையின் தலைவர் உட்பட முக்கிய அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# வாயாடல்களால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



வீம்பு பேசி நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது எனவும், சரியான குழுவுடனும் சரியான தொலைநோக்குடனும் நாட்டைக் கட்டியெழுப்புவதை மேற்கொள்ள வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

'பிரபஞ்சம்' வேலைத்திட்டத்தின் கீழ் 56ஆவது கட்டமாக ஐம்பது இலட்சம் (50,00,000) ரூபா பெறுமதியான பாடசாலை பஸ்ஸொன்று காலி உடுகம தேசிய பாடசாலைக்கு நேற்றுமுன்தினம் (02) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தான் பஸ்ஸை ஓட்டுகிறாரா இல்லையா என்பதை பார்த்து விமர்சிப்பதை விட,இந்த நடவடிக்கை பலனுள்ளதா இல்லையா என்பதை ஆராய்வது உகந்ததெனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நாட்டின் கல்விக் கட்டமைப்பை க் கட்டியெழுப்புவதற்கு என்ன விமர்சனம் வந்தாலும் முன்னெடுக்கும் பணிகள் நிறுத்தப்படாது எனவும் அவர் தெரிவித்தார்.

உலகில் ஏறக்குறைய சகல அபிவிருத்தியடைந்த நாடுகளும் நவீன கல்வி முறைகளை பரிசோதித்து வருவதாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், கல்வியில் புதிய பாய்ச்சலின் ஊடாக ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் எனவும் தெரிவித்தார். பழைய போர்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு மத்தியில் இருந்த ருவண்டா நாடு தற்போது ஆபிரிக்காவின் சிங்கப் பூராக மாறியுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், கல்வியில் புதிய போக்குகள் மூலம் முன்னேறிய நாடுகள் பல உள்ளன எனவும் தெரிவித்தார்.







தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்கள் 2023ஆம் ஆண்டுக்கான தமது கடமைகளை உறுதியுரையுடன் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் ரஜிவ் சூரியராச்சி தலைமையில் கடந்த திங்கட்கிழமை கொழும்பிலுள்ள தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பொது முகாமையாளர், பொறியியலாளார்,கே.ஏ ஜானக்க மற்றும் பிரதி பொது முகாமையாளர்களும் கலந்துகொண்டனர். (அஷ்ரப் ஏ சமத்)

# ஷானி அபேசேகரவின் காரில் பாய்ந்த துப்பாக்கித் தோட்டா!

## பொலிஸ் விசாரணைகள் ஆரம்பம்

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராக இருந்து இடைநிறுத்தப்பட்ட ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகரவின் கார் மீது பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் துப்பாக்கிச்சூடு நடத்திய சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஷானி அபேசேகரவின் வீட்டில் பாதுகாப்பு கடமைக்காக அமர்த்தப்பட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் கைகளால் இந்தச் சூட்டுச் சம்பவம் கடந்த 17ஆம் திகதி இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த காரிலேயே துப்பாக்கிச்சூடு காணப்பட்டது.

சம்பவம் இடம்பெற்றபோது ஷானி அபேசேகர வீட்டில் இல்லை எனவும், சம்பவம் தொடர்பில் ஷானி அபேசேகரவிடம் கான்ஸ்டபிள் தெரிவிக்கவில்லை எனவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஷானி அபேசேகர தனது கார் நிறுத்துமிடத்திற்கு சென்றபோது, எரிபொருள் கசிவு ஏற்பட்டதைக் கண்டறிந்ததை தொடர்ந்து, வாகனத்தை பரிசோதித்தபோது எரிபொருள் தாங்கிக்கு அருகில் தோட்டா பாய்ந்திருப்பதை கண்டுபிடித்தார்.

தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில், வீட்டின் காவலுக்கு நியமிக்கப்பட்டிருந்த பொலிஸ்காரர் ஒருவரால் இந்தச் சம்பவம் நடந்துள்ளமை தெரியவந்தது.

இது தொடர்பில் ஷானி அபேசேகர, பொரளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட காவலர் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளிடம் பொலிஸார் வாக்குமூலம் பதிவுசெய்துள்ளனர்.

இச்சம்பவம் தவறுதலாக இடம்பெற்றதாக குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் விசாரணையின் பின்னர் தெரிவித்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை பொரளை பொலிஸாரினால் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஷானி அபேசேகரவின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால் அவருக்கு ஆயுதம் தாங்கிய பொலிஸாரின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

# பொலிஸ் நிலையத்தில் திருடப்பட்ட துப்பாக்கியுடன் காட்டுக்குள் வேட்டை

## தந்திரிமலையில் ஒருவர் கைது

தந்திரிமலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரால் பொலிஸ் நிலைய ஆயுதக் களஞ்சியத்திலிருந்து திருடப்பட்டதாகக் கூறப்படும் ரி-56 துப்பாக்கியுடன் வேட்டையாடச் சென்ற நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் (02) வனவிலங்கு அதிகாரிகள் குழுவினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வில்பத்து தேசிய பூங்காவில் வைத்தே இந்நபர் கைதுசெய்யப்பட்டதுடன், வேட்டையாடப்பட்ட மான் ஒன்றின் இறைச்சி, ரி-56 தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. தந்திரிமலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவரால், சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட வேட்டைக்காரருக்கு இந்த துப்பாக்கி வழங்கப்பட்டதாக வனஜீவராசிகளின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வனவிலங்கு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட துப்பாக்கியின் எண்ணுடனான விபரங்கள் அப்பகுதி உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து பொலிஸ் உயர் அதிகாரிகளின் உத்தரவின்பேரில், தந்திரிமலை பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற பொலிஸார் அங்குள்ள துப்பாக்கிகள் தொடர்பில் சோதனையிட்டனர்.

இதன்போதே வனவிலங்கு அதிகாரிகள் வழங்கிய ரி-56 துப்பாக்கியின் இலக்கம் கொண்ட துப்பாக்கி ஒன்று களஞ்சியசாலையிலிருந்து காணாமல் போயுள்ளமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.




## Assistant Regional Service Manager – Colombo

Bnl o mx9Rhmf dqRqhK mj OKB

Odqrnm kOqnehkd9GHf gdqM shnm kClokl . Cdf qdd hm Dmf hmdddqmf nqL m f dl dmsnqdpt hu kdmspt kdehb shnm, @l hmhl t l /2+ xd qr l m f dqh kdwodqhdmbd, @f d adsv ddm 4-3/

*Email: careers@singersl.com*

## Technology Consulting Digital & Emerging Technologies – Java Senior

l na Cdr bqhoshnm

- Mddc sn v nqj r sdbgmhb kld c hmsgd cdudknol dms oqnidbsr t r hmf l u sdbgmnknf hdr
- V nqj hmf bknr dkx v hsg nt qbkhdmsr sn t mcdqrs mc sgdhq at r hmdr r, et mbshnm k, sdbgmhb k, mc hi okdl dms shnm qdpt hqdl dmsr
- Oqnuhcd j dx hmot shmsdbgmnknf x r s bj du kt shnm mc r r hs sgd dpghsdbs hmsddq r nesdbgmnknf x bgnhbdr enq sgd oqnidbsr v gdmmddcdc
- Cdr hf m mc f nudqmsgd qdt r akd bbdkdq snqr, ookx cdr hf mo ssdqmr mc qdt r akd sdbgmhb kbnl onmdmsr (d-f -dqpnqg mckhmf, knf f hmf dsb-)
- V nqj hmf v hsg sgd qdkdu ms sd l r sn dmr t qd sgd sh dkx cdkhudqx nesgd oqnidbsr
- Oqdo qhmf sdbgmhb krnkt shnm mc dpghsdbst qd cnbt l dmsr, qsde bsr, v nqj oqnct bsr mc oqdr dms shnmr enq sgd bt r snl dq
- Bnmsqhat sd snv qcr dwbdkkdmbd hm ghf gkx bnkk anq shud, sd l -nqhdmsdc dmuhqnml dms Qdpt hqdl dmsr
- Dwodqhdmbd hml u 7 mc anud-
- Dwodqhdmbd hmQDRS @OHl mc Rochmf eq l dv nqj. Rochmf anns v hsg l O@, Ghadqm sd-
- Rsqnmf hmRPK v hsg dwodqhdmbd hmRPK Rdqudq Nq bkd. mx nsgdqQCAL R-
- Jmnv kdcf d nmnaidbs-nqhdmsdc oqnf q l l hmf, RNKHC oqhmbhokdr, mc cdr hf mo ssdqmr-
- Dwodqhdmbd v hsg TL K chf q l r – bk r r chf q l , rdpt dmbd chf q l r dsb, c s a r d l ncdkhmf hmbkt chmf dmshsx-qdk shnmr gho chf q l r-
- G mcr nmdwodqhdmbd hmL hbqnr dqujbdr cdr hf m mc cdudknol dms

*Web: https://www.georgebernard.co/*

## Digital Content Writers

Bnl o mx9Dadxnmcr

@ookx9inar dadxnmcr-bnl , Mn92 /, Kdudk/3, Ghf g kdudkQn c, O mmhohshx -

## HR Trainee

Bnl o mx9Bg qs GQ Rnkt shnmr

Oqdedqdmbd Oqnehkd9T mcdqf q ct sd nq Pt kehdc hm EBGQL . BBGQL, @f d adsv ddm /- 3, Fnnc hmsdqodqrnm k mc bnl l t mhb shnmrj hkkr

Dl hkb qddqr bg qs-kj Bg qs GQ Rnkt shnmr OUS Ksc, Mn9/8 RbgnnkK md, J nkkt olshx , Bnknl an /2-

## Senior Merchandiser/ Trainee Merchandiser

Bnl o mx9Fnqf dnt r Sqh r Hmsdqm shnm kOUS Ksc

*Email: accounts@gorgeoustrims.com*

## Assistant Estate Managers

Bnl o mx9J dk mhu kkdx Ok ms hnmr

B mchc sd Oqnehkd9FBD@K pt kehb shnm mc anud, G ud l nqd sg m /3 xd qr ok mshmf dwodqhdmbd hm Sd , Qt aadq Bnbnmt s mc nsgdq ok ms shnmr bqnor, Ekt dmbx hmDmf khr g, Rhmg k mc S l hkv hkkad cdehmhsd cu ms f d, Rnt mc j mnv kdcf d nmOk ms shnm f qdbt kst qd nodq shnmr hr drrdmsh k-

*Email: hr@kvpl.com*





உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதி அம்மன் ஆலய வருடாந்த பிரம்மோற்சவ விழாவில் செவ்வாய்க்கிழமை (3) காளியம்மன் ஆலய கடற்கரையில் தீர்த்தோற்சவம் இடம்பெற்றது. இதில் பக்த அடியார்கள் பலர் கலந்துகொண்டனர். (உடப்பு செய்தியாளர்)














கம்பளை நகரத்தின் அருகாமையிலுள்ள ஜயமாலபுர என்னுமிடத்தில் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் 200 ஆண்டுகளுக்கு முன் நமது முன்னோர்களால் ஆரம்பிக்கப்பட்டது. கம்பளை நகரத்திலுள்ள வர்த்தகர்கள், சமூக சேவையாளர்கள் ஜயமாலபுரவைச் சேர்ந்த தமிழ் மக்கள், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோரின் உதவியுடன் ஆலயம் அபிவிருத்திசெய்யப்பட்டு இரண்டாவது முறையாக ஆலயத்தின் தலைவர் ஆறுமுகம் தலைமையில் அண்மையில் கும்பாபிஷேகமும் சங்காபிஷேகமும் நடைபெற்றன. அதன்போது இடம்பெற்ற நிகழ்வுகளை படங்களில் காணலாம். (கண்டி இரா. அ .ராமன்)

# மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கான நவீன இணையதளம் ஆரம்பித்துவைப்பு




(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட செயலக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவின் ஏற்பாட்டில் மாவட்ட செயலகத்திற்கான நவீன இணையதளம் “Smart Secretariat” அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரனால் அண்மையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இவ்விணையதளத்தினூடாக மாவட்ட செயலகத்தில் பயன்படுத்தக்கூடிய கணனி முறைமைகள் அனைத்தும் ஒரே இணையப் பக்கத்தில் அலுவலக உத்தியோகத்தர் களால் பயன்படுத்தக்கூடியவாறு உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவால் புதிதாக உருவாக்கப்பட்ட “Inventory Management System” மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் வழிகாட்டலின்கீழ் விவசாயப் பிரிவு உத்தியோகத்தர் துவாரகன் என்பவரால் உருவாக்கப்பட்ட “Hall Booking System” என்பனவும் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த், திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, பிரதம கணக்காளர் திருமதி இந்திரா மோகன், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் திருமதி லக்சிகா கதீசன், கணக்காளர் எம்.வினோத், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவு உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியில் பெரியபோரதீவு பாரதி வித்தியாலயம் சாதனை



(கல்லடி நிருபர்)

பட்டிருப்பு வலயக்கல்விப் பணிமனைக்கு உட்பட்ட பெரியபோரதீவு பாரதி மகா வித்தியாலய மாணவ மணிகள் கல்வி அமைச்சால் தேசிய ரீதியில் டிசம்பர் மாதம் 28ஆம் திகதி அநுராதபுரம் சுவர்ணபாலி பெண்கள் கல்லூரியில் நடைபெற்ற காவடி நடனம், செம்பு நடனம் என்பவற்றில் எமது பாரம்பரிய காவடி மற்றும் செம்பு நடனங்களில் பங்குபற்றி இரண்டிலுமே முதலாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

இதன்மூலம் எமது பாரம்பரிய கூத்துக்கலை மங்காது பிரகாசிக்கும் இப்பிரதேசம் கிராமிய கலை காக்கும் காப்பகமாகவும் விளங்குவது சிறப்பம்சமாகும்.

இத்தகைய இரத்தத்தோடு கலந்த பிரதேச கிராமிய கலையின் வெளிப்பாடே இந்த வெற்றி என இலக்கிய ஆர்வலர்கள் பாராட்டுத் தெரிவிக்கின்றனர். இந்த மாணவ மணிகளின் வெற்றி, கிழக்கின் கிராமிய கலையின் ஒரு திருப்புமுனையென கல்வியியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அத்துடன் அதிபரும், ஆசிரியர்களும் மனம் வைத்து செயற்பட்டால் எதையும் சாதிக்கலாம் என்பதை இப்பாடசாலையின் அதிபரும், நடன ஆசிரியையும் மற்றும் ஆசிரியர்களும் இணைந்து கூட்டுமுயற்சி மூலம் இந்த சாதனையை நிலை நிறுத்தியுள்ளனர் என கல்வித் திணைக்கள வட்டாரங்கள் பெருமை கொள்கின்றன.

இதற்கான நடன ஆசிரியை திருமதி மலர்விழி ரவிச்சந்திரன் மிகவும் வித்தியாசமான முறையில் இதற்கான பயிற்சிகளுக்கான அணுகுமுறையை மேற்கொண்டிருந்தமை சிறப்பம்சமாகும். அவர் மாணவர்களுக்கு தான் ஆடி காட்டாமல் அவர்களை சைகை மூலம் ஆடவைத்துதான் இந்த சாதனையை நிலைநாட்டியமை இந்த வெற்றியின் மறு பக்கமாகும்.

# 33 வருட ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு



(மீராவோடை நிருபர்)

வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக சேவை புரிந்துவந்த எஸ்.எம்.ஆதம் லெப்பை கடந்த டிசம்பர் 31ஆம் திகதி தனது 33 வருட ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்றுள்ளார்.

ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மீராவோடை பகுதியில் 1962ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14ஆம் திகதி பிறந்த இவர், தனது ஆரம்பக் கல்வியை மீராவோடை அல்-ஹிதாயா பாடசாலையில் கற்றதோடு, தரம் 6 - 11 வரை காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயத்திலும் உயர்தரக் கல்வியை மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியிலும் கற்றுள்ளார்.

1985ஆம் ஆண்டு எழுதுவினைஞராக நியமனம் பெற்ற இவர், கல்குடா கல்வி வலயத்தில் பணியாற்றியுள்ளார்.

1988இல் கால்நடை உற்பத்தித் திணைக்களத்தில் பயிற்சி மிருக வைத்தியராக தெரிவுசெய்யப்பட்ட போதும் கடமையைப் பொறுப்பேற்காமல், 1989ஆம் ஆண்டு மீராவோடை அல்-ஹிதாயா வித்தியாலயத்தில் தொண்டர் ஆசிரியராக கடமையாற்றியுள்ளார்.

அத்துடன், 1990ஆம் ஆண்டுமுதல் 2009ஆம் ஆண்டுவரை காவத்தமுனை அல்-அமீன் வித்தியாலயத்தில் பயிலுனர் ஆசிரியராக சேவையாற்றியுள்ளார்.

அதைத் தொடர்ந்து 2009 தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் ஓட்டமாவடி பாத்திமா பாலிகா வித்தியாலயத்தில் சேவை புரிந்து வந்துள்ளார்.

2019ஆம் ஆண்டு வாழைச் சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் இணைந்து சேவையாற்றிய இவர், அங்கிருந்து 2022 டிசம்பர் 31ஆம் திகதி தனது 60ஆவது வயதில் ஓய்வுபெற்றுச் சென்றுள்ளார்.

தனது கல்விப் பணியில் ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக திறன்பட கடமையை மேற்கொண்டு வந்த இவர், சமூக சேவைகளிலும் தன்னை அர்ப்பணித்துள்ளார்.

அந்தவகையில், மீராவோடை அல்-ஹிதாயா விளையாட்டுக் கழகம், மீராவோடை இளைஞர் கழகம் மற்றும் மீராவோடை அல்-ஹிதாயா பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றை உருவாக்கம் செய்வதில் பாரியளவில் பங்காற்றியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவானான இவர், மீராவோடை சமாதானக் குழு, ஜனசக்தி குழு ஆகியவற்றின் உறுப்பினராகவும், கிராம அபிவிருத்தி சங்கச் செயலாளராகவும் செயற்பட்டு வந்ததோடு, தற்போது ஓட்டமாவடி மத்தியஸ்த சபை உறுப்பினராகவும், பொலிஸ் சமாதானக் குழு உறுப்பினராகவும் தனது சமூக சேவையை ஆற்றிவருகிறார்.

# தாழங்குடா கிருஸ்ணர் ஆலய திருப்பாவை உற்சவம்




(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தாழங்குடாவில் அமைந்துள்ள கிருஷ்ணர் ஆலயத்தில் மார்கழி திருப்பாவை உற்சவமும், நிஷ்ப்தபதியின் 33ஆவது ஆண்டு விழா நிகழ்வும் நேற்று முன்தினம் (02) நடைபெற்றது.

சரீரம் நிஷ்ப்தபதி ஸ்ரீலங்கா தேசிய மன்றத்தின் ஸ்தாபகர் கலாநிதி கர்மயோகி ஆறுமுகம் லோகேஸ்பரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதலில் கிருஷ்ணர் ஆலயத்தில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு சங்காபிஷேகம் இடம்பெற்றது.

மகா விஷ்ணு சமேத சீதேவி, பூதேவிகளுடன் அருள்பாலிக்கும் சரீரம் நிஷப்தபதி ஆலயத்தில் சொர்க்கவாசல் திறக்கப்பட்டு, விசேட யாக பூசைகளும் இடம்பெற்றன.

இதன்போது பொருளாதார நெருக்கடியிலும் மக்களுக்கு அர்ப்பணிப்புடன் ஊடகப் பணியாற்றி வரும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 22 தமிழ் மற்றும் முஸ்லிம் ஊடகவியலாளர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராசிரியர் மா.செல்வராசா, மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் புண்ணியமூர்த்தி, மாவட்ட தகவல் அதிகாரி வ.ஜீவானந்தன் மற்றும் சிவாச்சாரியார்களும், சரீரம் நிஷப்தபதி ஸ்ரீலங்கா தேசிய மன்றத்தினரால் இதன்போது விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன், சமூகசேவையாளர்கள் பலரும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

இவ்வாலயத்தில் ஆண்டுதோறும் பல்வேறு விழாக்கள் நடைபெற்றாலும் மார்கழி மாதத்தில் நடைபெறும் வைகுண்ட ஏகாதசி விழா சிறப்பு வாய்ந்ததாக பக்தர்களால் கருதப்பட்டு வருவதானது விசேட அம்சமாகும்.

# அரச ஊழியர்கள் காலை 8 மணிக்கு அலுவலகம் வந்து மாலை 5 மணிக்கு கிளம்பும் குழுவாக மாறக்கூடாது

## கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்



(திருமலை நிருபர்)

அரசு ஊழியர்கள் காலை 8 மணிக்கு அலுவலகம் வந்து மாலை 5 மணிக்கு கிளம்பும் குழுவாக மாறக்கூடாது - என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாட்டிலிருந்து தமக்கு என்ன கிடைக்க வேண்டும் என்று மாத்திரம் சிந்தித்துப் போராடுவதை விடுத்து, நாட்டுக்கான கடமைகளை சரியாக நிறைவேற்றி நாட்டின் அபிவிருத்திக்கு நேரடியான பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் 2023ஆம் ஆண்டு புத்தாண்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த கிழக்கு மாகாண ஆளுநர்,

"நமது நாடு இப்போது மிகவும் ஆபத்தான இடத்தில் உள்ளது. இது வெறும் அரசியல் நெருக்கடி என்று நினைக்க வேண்டாம். பொருளாதார நெருக்கடியும் உள்ளது, அதிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்ப யாரும் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. மக்களுக்கு சேவைசெய்ய புதிய வழியில் சிந்திப்போம். நாட்டின் ஒன்பதில் ஒரு பங்கு நம் கையில் உள்ளது என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். எமது மாகாணம் விவசாயத்தின் மூலம் நாட்டுக்கு அதிக பங்களிப்பை வழங்கி வருகின்றது. நமது மாகாணம் இயற்கை வளங்கள் அதிகம் கொண்ட மாகாணம். தொழில்கள் மூலம் அதிகபட்ச பலன்களை அறுவடை செய்ய வேண்டும். வளர்ச்சிக்கு இன வேறுபாடுகள் பொருந்தாது. நாம் அனைவரும் பொருளாதார வளர்ச்சியின் கட்டமைப்பிற்குள் நுழைய வேண்டும். அப்படி நடந்தால்தான் இந்த பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியும். நாம் இன்று உணவு நெருக்கடி பற்றி பேசுகிறோம். எங்கள் மாகாணத்தில் ஒரு குழந்தை கூட உணவின்றி இருக்க முடியாது. அது நடந்தால், அதற்கு நாம் அனைவரும் பொறுப்பேற்க வேண்டும் - என்று கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க, ஆளுநர் செயலாளர் எல்.பி.மதநாயக்க, மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், பிரதி பிரதம செயலாளர்கள், மாகாணப் பணிப்பாளர்கள், நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சஹ்ரான் ஹாசீமுடன் தொடர்பைப் பேணியதாக இந்தியாவில் கைதானவருடன் தொடர்பிலிருந்தவர் காத்தான்குடியில் கைது

(கனகராசா சரவணன்)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்தாரி சஹ்ரான் ஹாசீமுடன் தொடர்புடையவர்களான இந்தியாவில் கைதுசெய்யப்பட்ட ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்தவர்களுடன் தொடர்பில் இருந்த காத்தான்குடியைச் சேர்ந்த 30 வயதுடைய ஒருவரை நேற்று முன்தினம் (02) இரவு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்துள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதத்தில் இந்தியா, கோயம்புத்தூரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சந்தேக நபர்களுடன் தொடர்புகொண்டிருந்ததாகக் கூறப்படும் ஷேக் ஹிதாயத்துல்லா மற்றும் இந்தியாவில் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தும் திட்டங்களில் பங்கேற்றதாகக் கூறப்படும் சனோபர் அலி ஆகியோரே டிசம்பர் 29ஆம் திகதி இந்தியாவில் கைதுசெய்யப்பட்டனர்.

இந்த சந்தேகநபர்கள் 2022 பெப்ரவரியில் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வனப்பகுதியின் ஆசனூர் மற்றும் கடம்பூர் பகுதிகளிலுள்ள வனப்பகுதியின் உட்பகுதியில் குற்றவியல் சதித்திட்டத்தில் ஈடுபட்டதுடன், இலங்கையில் 2019 ஏப்ரலில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் ஹாசீமுடன் தொடர்பில் இருந்துள்ளதாகவும் கைதுசெய்யப்பட்ட ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்தவருடன் காத்தான்குடியைச் சேர்ந்த 30 வயதுடைய உவர் லெப்பை அகமட் நுஸ்கீன் முகநூலில் தொடர்புகளை பேணிவந்துள்ளதாக இந்திய உளவுத்துறை விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து இலங்கை உளவுத்துறைக்கு அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் காத்தான்குடி பழைய கல்முனை வீதி எம்.பி.சி.எஸ். குறுக்கு வீதியைச் சேர்ந்த குறித்த நபரை நேற்று முன்தினம் இரவு அவரது வீட்டில் வைத்து விசாரணைக்காக பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளராக அனீஸ் நியமனம்

(சர்ஜுன் லாபீர்)



அம்பாறை மாவட்ட செயலகத்தில் திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றிய டீ.மோகனகுமார் அண்மையில் ஓய்வுபெற்றுச் சென்றதையடுத்து மாவட்ட செயலகத்தில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றும் எச்.பீ.அனீஸ் திட்டமிடல் பணிப்பாளராக நேற்று முன்தினம் (2) அம்பாறை மாவட்ட செயலாளரால் இப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

அட்டாளைச்சேனையைச் சேர்ந்த இவர் லகுகல, அம்பாறை, பொத்துவில் போன்ற பிரதேச செயலகங்களில் கடமையாற்றியுள்ளார்.

இவர் அட்டாளைச்சேனை முஸ்லிம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் என்பதுடன், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கணக்கீட்டுத் துறையில் விசேட பட்டம் பெற்றதோடு, முதுநிலை பட்டத்தையும் பெற்றுள்ளார்.

# கிழக்கு மாகாண பதில் செயலாளராக கோபாலரெத்தினம் நியமனம்



கிழக்கு மாகாண சபை செயலகத்தின் பதில் செயலாளராக மட்டக்களப்பைச் சேர்ந்த எம்.கோபாலரெத்தினம் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.


கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், உதவிச் செயலாளர்கள், மாகாண திணைக்களங்களின் பணிப்பாளர்கள் மற்றும் ஆணையாளர்கள் ஆகிய உயரதிகாரிகளுக்கான 2023ஆம் ஆண்டின் புதுவருட சந்திப்பும், இவ்வாண்டின் வேலைத்திட்ட செயற்பாடுகள் பற்றிய கலந்துரையாடலும் நேற்று முன்தினம் (02) கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றபோதே அவருக்கான இந்த நியமனக் கடிதத்தை வழங்கினார்.

கடந்த காலங்களில் கிழக்கு மாகாண சபை செயலகத்தின் செயலாளராக கடமையாற்றிய வந்த எம்.வை.சலீம் கடந்த 31.12.2022 ஆம் திகதி ஓய்வுநிலைக்குச் சென்றதையடுத்து ஏற்பட்ட இந்த வெற்றிடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவ்வாறு நியமிக்கப்பட்டுள்ள இவர், கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பதவியும் வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இக்கலந்துரையாடலில் மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், உதவிச் செயலாளர்கள், மாகாண திணைக்களங்களின் பணிப்பாளர்கள் மற்றும் ஆணையாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

## போடியார் புலம்பல்!



**முட்டையை
இறக்குமதிசெய்ய
அமைச்சரவை அங்கீகாரம்
கொடுத்திருக்காங்க எலுவா..?
நரி ஆட்சி, முட்டை மந்திரி
சபை எப்படி நாடு எண்டது
சோக்காத்தான் தெரியுது. இனி
என்ன கழுதை இராஜாங்க
அமைச்சர்கள் கத்தமட்டும்தான்
தெரியும்!
ஆனா நம்மட தமிழ்
அமைச்சர், நம்மட
இராஜாங்க அமைச்சர்மார்
எலும்புத்துண்டுக்காக வால்
ஆட்டிக்கொண்டே இருப்பாங்க
.. மறுகா நான் சொன்னது சரி
எலுவா ?**

# ஐ.ம.சவின் திகாமடுல்ல மாவட்ட அமைப்பாளராக அக்கரைப்பற்றைச் சேர்ந்த புகாரி நியமனம்



(கோணாவத்தை நிருபர்)

அக்கரைப்பற்றைச் சேர்ந்த எம்,ஐ,ஏ,ஆர்.புகாரி ஐக்கிய மக்கள் சக்தியின் திகாமடுல்ல மாவட்ட அமைப்பாளராக அக்கட்சியின் தேசியத் தலைவரும் எதிர்க்கட்சியின் தலைவருமான சஜித் பிரேமதாசவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் அக்கரைப்பற்று மத்திய கல்லூரியினதும் யாழ். இந்துக்கல்லூரியினதும் பழைய மாணவர் என்பதுடன், பேராதனைப் பல்கலைக்கழக விசேட விஞ்ஞானப் பட்டதாரியுமாவார்.

இவர் முன்னாள் வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர்.மன்சூரின் ஆலோசகரும், முன்னாள் கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்தின் கிழக்கு மாகாண பிராந்திய முகாமையாளருமாவார்.

கட்சித் தலைமைக் காரியாலத்தில் வைத்து கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மத்தும பண்டார முன்னிலையில் கட்சித் தலைவரால் வழங்கப்பட்டது.

# எல்லை நிர்ணயத்தில் அம்பாறை மாவட்ட முஸ்லிம்களுக்கு அநீதி

(மாளிகைக்காடு நிருபர்)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிகழ்ச்சி நிரலுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் போன்றவர்களின் சூழ்ச்சிகளுக்கும் அம்பாறை மாவட்ட எல்லை நிர்ணயக் குழு அதிகாரிகள் சிலர் சோரம்போகியுள்ளனரா என்ற சந்தேகம் உள்ளதாகவும், தமிழ் சகோதரர்களுக்கு நன்மை பயக்கவேண்டும் என்பதற்காக திட்டமிட்டு அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் முஸ்லிம் உறுப்பினர்களைக் குறைத்து தமிழ் உறுப்பினர்களை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர் போன்றே தெரிகிறது எனவும் அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் எஸ்.எம்.சபீஸ் தெரிவித்தார்.

அக்கரைப்பற்றில் நேற்று (03) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், மட்டக்களப்பு மாவட்டத்தில் தலைதூக்கியுள்ள நிர்வாக பயங்கரவாதம் இப்போது அம்பாறை மாவட்டத்திலும் தலைதூக்க ஆரம்பித்துள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஒற்றுமையுடனும் சகவாழ்வுடனும் வாழும் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையில் சண்டையை மூட்டிவிடும் வேலைத்திட்டங்களை அம்பாறை அரசாங்க அதிபர் காரியாலயத்திலுள்ள சில உயர் அதிகாரிகள் செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அக்கரைப்பற்று, சம்மாந்துறை, நாவிதன்வெளி, காரைதீவு, கல்முனை, இறக்காமம், அட்டாளைச்சேனை போன்ற பல்வேறு உள்ளூராட்சி மன்றங்களில் இனங்களுகிடையில் பிணக்குகளை உருவாக்கும் விதமாக வட்டாரப் பிரிப்புகளும், எல்லை நிர்ணயங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை அதிக இடங்களில் முஸ்லிம் சமூகம் இழக்கும் அபாயம் தோன்றியுள்ளது.

அதேநேரம், தமிழ் உறுப்பினர்கள் அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது. இந்த முரண்பாடுகளைக் கலைந்து யாரும் பாதிக்காத வகையில் புதிய எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்றும், வட்டாரங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்றும் தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவையும், இனவாத பாகுபாடுகளின்றி நியாயமான முறையில் அம்பாறை மாவட்ட எல்லை நிர்ணயம் மீள செய்யப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்வதுடன், இந்த விடயத்தில் ஓரிருவர் மட்டும் தலையிடாமல் அம்பாறை மாவட்ட மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் சென்ற சகல முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளும் தலையிட்டு முஸ்லிம்களுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

# சாய்ந்தமருதில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய சாத்தியம்

## கட்டுப்படுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பம்

(சாய்ந்தமருது நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட சாய்ந்தமருது பிரதேசத்தில் டெங்கு நுளம்புகள் அதிகரித்த நிலையில் விசேட நுளம்பு ஒழிப்புத் திட்டமொன்று சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது பிரதேசத்தில் அண்மையில் சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் பிரதேச மக்கள் தங்கள் வீட்டுச் சூழல் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளை சுத்தமாக வைத்திருக்குமாறு சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி யு.எல்.எம்நியாஸ் பொதுமக்களை கேட்டுள்ளார்.

வீட்டுச்சுற்றுப்புற சூழலில் காணப்படும் நீர் தேங்கி நிற்கக்கூடிய பொருட்களை கல்முனை மாநகர சபையின் குப்பைகள் சேகரிக்கும் வண்டிகளில் ஒப்படைக்குமாறு பொதுமக்களுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.

இதன்பின்னர் வீடுவீடாகச் சென்று பொது சுகாதாரப் பரிசோதகர்கள் பரிசோதனையில் ஈடுபடும் வேளையில் நுளம்புகள் பெருகுவதற்கு ஏதுவாகவுள்ள இடங்களை அடையாளம் கண்டுபிடித்தால் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யு.எல்.எம். நியாஸ் மேலும் தெரிவித்தார்.

# இஸ்லாமிய சர்வதேச செயலகத்தின் இணைப்பாளராக ஜெமீல் நியமனம்



(சாய்ந்தமருது நிருபர்)

மலேசியாவின் மலாக்கா மாநில ஆளுநர் துன் முஹமட் அலி ருஸ்தாம் தலைமையிலான மலாய் இஸ்லாமிய சர்வதேச செயலகத்தின் இலங்கைக்கான இணைப்பாளராக முன்னாள் கிழக்கு மாகாண சபையின் குழுத் தலைவரும் College of Management and Technology (CMT Campus) தவிசாளருமான கலாநிதி ஏ.எம்.ஜெமீல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள மலாக்கா ஆளுநரின் பங்குபற்றலுடன் நேற்று முன்தினம் (02) மாலை, கொழும்பில் இடம்பெற்ற வைபவம் ஒன்றின்போதே அவரால் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கலாநிதி ஏ.எம்.ஜெமீலின் அழைப்பின்பேரில் மலாக்கா மாநில ஆளுநர் துன் முஹமட் அலி ருஸ்தாம், இன்று (04) கல்முனைக்கு விஜயம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு கல்விப் பணிப்பாளராக கடமைகளை பொறுப்பேற்றார் அகிலா கனகசூரியம்



(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக திருமதி அகிலா கனகசூரியம் தமது கடமைகள உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் (02) பொறுப்பேற்றுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநரிடம் தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டதையடுத்து, கிழக்கு மாகாண கல்வி அலுவலகத்தில் தமது கடமைகளை சுபவேளையில் ஆரம்பித்துள்ளார்.

இலங்கை அரச சேவையில் பல்வேறு பதவி நிலைகளில் கடமை புரிந்து, ஆசிரியையாக, வலயக்கல்விப் பணிப்பாளராக, மாகாண கல்வித் திணைக்கள பிரதி திட்டமிடல் பணிப்பாளராக கடந்த காலங்களில் பணியாற்றிய இவர், இன்றைய தினம் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக தனது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்.

தனது ஆசிரியர் சேவையைத் தொடர்ந்து கல்வி நிர்வாக சேவையில் 1999ஆம் ஆண்டு தை மாதம் இணைந்துகொண்ட இவர் 24 வருடங்களாக கல்வி நிர்வாக சேவையில் சேவையாற்றி வருவதோடு கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் நீண்டகாலமாக திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றியுள்ளார்.

இன்றைய பதவியேற்பு நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திஸாநாயக்க கலந்துகொண்டதுடன், கிழக்கு மாகாண நிர்வாக அதிகாரிகளும், கல்வி நிர்வாக அதிகாரிகளும், மாகாண கல்வித்துறை சார்ந்த பலரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.